உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-165

ஆகஸ்ட் 1-15 2023



விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine

## ஆடிமாதத்தில் கூழ், எலுமிச்சை, வேப்பிலைக்கு ஏன் முக்கியத்துவம் தரப்படுகிறது

# இம்மாதத்தின் மற்ற புண்ணிய, விசேஷ தினங்கள்!

ஆடி1 முதல், ஆடி 5ம் தேதிவரை: நாம் நமது அனைத்து புண்ணிய நதிகளான கங்கா, யமுனை, கோதாவரி, காவேரி, கிருஷ்ணா, துங்கபத்ரா, சரஸ்வதி, சிந்து, அலகநந்தா, மந்தாகினி, வேத்ரவதீ அனைவரையும் தேவியராகவே பூஜித்து வருகிறோம்.



இவர்கள் அனைவரும் ஆடி மாதத்தின் முதல் மூன்று நாட்கள் “ரஜஸ்வலை” நிலையை அடைவதாகவும், ஆதலால் ஆடி மாதத்தின் முதல் 5 நாட்கள் நதிகளில் நீராடக் கூடாது எனவும் நம் தர்ம நூல்கள் கூறுகின்றன.

ஆடி 6 (22.7.2023) திரு ஆடிப் பூரம். பரமபக்தையும், பக்தியினாலேயே அரங்கனைப் பதியாக அடைந்தவளுமான ஆண்டாள், ஸ்ரீவில்லிப்புத்தூரில் அவதரித்த புண்ணிய தினம்.

ஆடி 18 (3.8.2023)18ம் பெருக்கு. தமிழக மக்கள், தங்கள் புண்ணிய நதியான காவிரியை பூஜிக்கும் பரம பவித்ரமான தினம்.

ஆடி 24 (9.8.2023) ஆடிக் கிருத் திகை!! முருகப் பெருமானைப் பூஜிக்க வேண்டிய புண்ணிய தினம்.

ஆடி 30 (15.8.2023 கிருஷ்ண அங்காரக சதுர்த்தசி. செவ்வாய்க்கிழமை, தேய்பிறை, சதுர்த்தசி இணையும் புண்ணிய தினம். சூரிய கிரகண புண்ணிய காலத்திற்குச் சமமானது. இன்று பித்ருக்களுக்கும், எம தர்மராஜருக்கும் தர்ப்பணம் செய்வது பாபங்கள் அகன்று, புண்ணிய பலன் கிட்டும்.


ஆடி 31 (16.8.2023) ஆடி அமாவாசை பித்ருக்களைப் பூஜிக்க வேண்டிய புனித தினம். சமுத்திர ஸ்நானம், புண்ணிய நதிகளில் ஸ்நானம் பாபங்களைப் போக்கும்.

## பிறரை கடைத்தேற்றுபவரே மகான்

சுவாமி விவேகானந்தரை மிக உயர்ந்த தியான நிலைக்கு ராமகிருஷ்ண பரமஹம்சர் எடுத்துச் சென்றார். அத்தகைய பேரின்பத்தை அவருக்கு அளித்த பின்னர் மீண்டும் அவரை சாதாரண நிலைக்கு கொண்டு வந்தார்.

அப்பொழுது பரமஹம்ஸர் விவேகானந்தரைப் பார்த்து ”உனக்கு என்ன வேண்டும்,” என்று கேட்டார். ”சற்று நேரத்திற்கு முன்பு நான் இருந்த பரவச நிலையிலேயே என்னை எப்போதும் இருக்கச் செய்து விடுங்கள்” என்று விவேகானந்தர் பதில் கூறினார்.

”உன்னிடமிருந்து நான் இதை எதிர்பார்க்கவில்லை. இலை ஒன்று நீர்மேல் மிதந்து செல்லும். ஆனால் சிறு குருவி அதன் மீது அமர்ந்தாலும் அது நீருக்குள் முழுகிப் போய்விடும். கப்பல் ஒன்று ஏராளமான சாமான்களை ஏற்றிக்கொண்டு மிதந்து செல்லும். இலை போன்று நீ மட்டும் அப்பேரின்பத்தில் இருந்தால் போதாது. பல்லாயிரக் கணக்கான மக்களை பல துன்பக் கடலிலிருந்தும் கரையேற்றும் பொறுப்பு உன்னுடையது” என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். ஞானிகள் தாங்கள் பந்த பாசத்தினின்றும் விடுபடுவது போல பிறரையும் விடுவிக்க விரும்புகின்றனர் என்பதற்கு சிறந்த



www.aanmeegamalar.com

# தூக்கி எறி...
# மன கலக்கம் தீரும்!

அந்த மஹான் மிகவும் சக்தி உள்ள பெரிய ஞானி என்று கேள்விப்பட்ட செல்வந்தன் ஒருவன், ஆயிரம் பொற்காசுகளை எடுத்துக் கொண்டு, அவருக்கு பரிசளிப்பதற்காக, அவரைப் பார்க்கப் போனான்.

ஆனால், அவர், "எனக்கு இவை எல்லாம் தேவை இல்லை" என்று சொல்லி விட்டார்.

அதற்கு அந்த செல்வந்தன்,

'எனக்கு அவ்வப்போது மனதில் கலக்கமும், தேவை இல்லாத துயரமும், சஞ்சலமும் ஆட் கொள்கிறது. அதைதான் உங்களிடம் சொல்ல வந்தேன். வெறும் கையுடன் வருவதற்கு மனமில்லாமல் இந்த பொற்காசுகளை கொண்டுவந்தேன். தவறாக நினைக்க வேண்டாம்.'என்றான்.

'சரி. உன் மனதை மேலும் காயப்படுத்த விரும்பவில்லை. அதனால், இதனைப் பெற்றுக் கொள்கிறேன்.' என்று சொன்ன ஞானி,

அந்த பொற்காசுகளை கையில் வாங்கிக் கொண்டார்.

'இனிமேல் இந்த பொற்காசுகள் என்னுடையது தானே? உனக்கு இனி சொந்தமில்லையே?'

'ஆமாம். ஆயிரம் பொற்காசுகளையும் தங்களிடம் கொடுத்து விட்டேன். இனி, இவை உங்களுடையது தான்.'

'அப்படியானால் ஒன்று செய். இந்த ஆயிரம் பொற்காசுகளையும், அதோ அந்த நதியில் வீசி விட்டு, என்னிடம் வா ' என்றார் ஞானி.

செல்வந்தன்அதிர்ச்சிஅடைந்தான்... இருப்பினும், வேறு வழியில்லாமல் ஞானியிடம் பொற்காசுகளை வாங்கிக் கொண்டு, அந்த செல்வந்தன், நதியை நோக்கி நடந்தான்.



வெகு நேரம்ஆகியும், செல்வந்தன், திரும்பவராதது கண்டு, ஆற்றங்கரைக்கு சென்றார் ஞானி. உஅங்கு, அந்த செல்வந்தன்தன்னிடமிருந்த பொற்காசுகளை ஒவ்வொன்றாக எண்ணியபடி ஆற்றில் வீசிக் கொண்டிருந்தான்.

ஞானியை பார்த்ததும் எழுந்து நின்று வணங்கினான்.

'என்ன செய்து கொண்டிருக்கிறாய்? தூக்கி எறிந்து விட்டு வர சொன்னேன் இல்லையா?'

'உண்மைதான். ஆனால், இவை எல் லாம் எனது சம்பாத்தியம். உங்களுக்கு உபயோகப் படும் என்று நினைத்துதான் தங்களிடம் எடுத்து வந்தேன். இப்போது ஆற்றில் வீசுவதற்கு மனமில்லாமல் வீசிக் கொண்டிருக்கிறேன்.'

ஞானி அமைதியாக சொன்னார்.

'அது போலதான் உன் மனதின் கலக்கமும், துயரமும். உனது சம்பாத்தியம்தான். ஆனால், அவை உன்னுடையது அல்ல. இருந்தாலும், உன் மனம், அதனுடைய சொந்த சொத்து போல, கலக்கங்களையும், துயரங்களை யும் முழுவதுமாக தூக்கி எறிய மறுக்கிறது.

இவை நமக்குத் தேவை இல்லை.

இவைகள் எல்லாம் இழக்க பட வேண்டியவை என்று எதை நாம் மனதால் நினைக்கிறோமோ,

அதை, மனதில் இருப்பதை எல்லாம் முழு வதையும் ஒரே முறையில் தூக்கி எறிந்து, இழந்துவிட வேண்டும்.

எண்ணிக்கொண்டு, மெல்ல மெல்ல இழந்து கொண்டிருப்பது சுத்த மூடத்தனம். இதை மனதில் பயிற்சி செய். இனி உன் வாழ்வில் வரும் மனகலக்கங்களும், துயரங்க ளும், அவை வ செல்லுமிடம்உனக் கேத் தெரியாமல் சென்றுவிடும்.' ஞானியை மீண்டும் தொழுதார் செல்வந்தர்.






# பயம், பில்லிசூன்யம், கண்திருஷ்டி, வியாபார நஷ்டத்தை போக்கும்

# சுதர்சன சக்கர வழிபாடு

அம்பரீஷன் என்ற மன்னன் பெருமாளின் மீது மிகவும் பற்று கொண்டவர். அவர் கனவில் தோன்றிய திருமால், ‘எனது சுதர்சன சக்கரத்தை வழிபடு; அவர் எந்த நேரத்திலும் உனக்கு நல்ல பலனை கொடுப்பார்’ என்று கூறி மறைந்தார். அன்று முதல் சுதர்சன சக்கரத்தை வழிபட ஆரம்பித்து ஏகாதசி விரதமும் இருந்து மறுநாள் துவாதசி அன்று காலை உணவு உட்கொண்டு விரதத்தை முடிப்பார் மன்னர். அவருடன் மக்களும் இவ்விரதத்தை செவ்வனே மேற்கொண்டனர். இந்த மன்னனை சோதிக்க விரும்பிய துர்வாச முனிவர் ஒருநாள் அரண்மனைக்கு வந்து மன்னனுடைய ஏகாதசி விரதத்துக்கு இடையூறு செய்தார். அதோடு, ஒரு பூதத்தை தோற்றுவித்து மன்னனை விழுங்க உத்தரவிட்டார்.

ஆனால், அம்பரீஷன் தினமும் வணங்கிவரும் சுதர்சனர் மன்னரைக் காப்பாற்ற சீறிப் பாய்ந்து பூதத்தைக் கொன்றுவிட்டு அதை அனுப் பிய துர்வாச முனிவரையும் துரத்தினார். அதைக் கண்டு வெகுண்ட முனிவர் ஓடிச்சென்று பெரு மாளை சரணடைந்தார். நாராயணன் அவரை அம்பரீஷிடம் மன்னிப்பு கேட்கச் சொன்னார்.

அதன்படியே முனிவர் செய்ய, அம்பரீஷன் சுதர்சனரை போற்றி பதினொரு சுலோகங்கள் பாடினார். அதைக்கேட்டு சுதர்சனர் அமைதி யானார்.

திருமாலின் பஞ்ச ஆயுதங்களான சுதர்சனம், பாஞ்ஜசன்யம், கௌமோதகீ, நந்தகம், சார்ங்கம் போன்றவை அவர் பணிகளை செய்யஎப்பொழுதும் தயாராக இருக்கும். இந்த ஐந்தும் ஐந்துவிதமான ஆயுதங்களாகும்.

இந்த ஐந்து ஆயுதங்களில் முதன்மையானது சுதர்சனமாகும், பஞ்சாயுதங்களில் முதன்மையான சுதர்சனத்தை சக்கரத்தாழ்வார் என்றும் அழைக்கப்படுகின்றன.

எனவே சுதர்சன சக்கரம் அல்லது சக்கரத் தாழ்வாரை தொடர்ந்து வழிபட்டு வந்தால், மானிடப் பிறவியில் ஏற்படும் நோய்கள், மனஅமைதி யின்மை எதிலும் தோல்வி, மரணபயம், பில்லி, சூனிய பாதிப்புகள், வியாபாரத்தில் நஷ்டம், கண் திருஷ்டி, முன்னேற்றத் தடை போன்றவை சட்டென விலகிச் செல்லும் என்பார்கள்.




# கன்னி தெய்வ வழிபாட்டிற்கு உகந்த ஆடிமாதம்

ஒரு பெண் இந்த உலகில் தோன்றி மனம்முடிக் காமல் கன்னியாக மறைந்தால் அவளை வழி படும் பண்பாடு நம் கிராமங்களில் தொடர்ந்து வருகிறது.

பெண்களை தெய்வமாக வழிபடும் வழக்கம் நமது பாரத தேசத்தில் பழங்காலத்தில் இருந்தே தொன்று தொட்டு நடந்து வருகிறது.

சக்தி வழிபாடு என்பது தாய்வழி வழிபாடுதான்.

ரிக் வேதத்திலும் மார்க்கண்டேய புராணத்திலும், காளிதாசரின் குமார சம்பவத்திலும், விஷ்ணு தர்மோத்தர புராணத்திலும், தேவி பாகவதத்திலும் கன்னிமார்களின் வரலாறு போற்றப்படுகிறது.

மிக பிரபலமாக கன்னி தெய்வங்கள் போற்றப் படுவதற்கு பல காரணங்கள் உண்டு.

இன்பத்தை கருவாக்கினாள் பெண். உயிருக் குள் உயிர் சுமந்து மனித குலத்தை விருத்தி அடையச் செய்தவளும் பெண்தான்.

இந்த காரணத்தினாலேயே பெண்ணை மகா சக்தியாகப் பார்த்திருக்கிறான் ஆதிமனிதன்.

தன்னைவிட பலம் குன்றிய பெண்ணைப் பார்த்து பயந்திருக்கிறான்.

அவளைக் கையெடுத்துக் கும்பிட்டிருக்கிறான்.

அந்தப் பழங்கால மரபுக்கும் வரலாறுக்கும் இன்றும் நிலவும் சான்று தான் தமிழர்களின் கன்னி வழிபாடு.

ஒரு பெண் இந்த உலகில் தோன்றி மனம் முடிக்காமல் கன்னியாக மறைந்தால் அவளை வழிபடும் பண்பாடு நம் கிராமங்களில் தொடர்ந்து வருகிறது.

இந்தக் கன்னிகள் பெரும்பாலும் தங்களின் சரா சரி வாழ்வைத் தவற விட்டவர்கள்.

அல்லது துச்சமாகத் தூக்கியெறிந்தவர்கள்.

கன்னித்தன்மையைக் கொடுத்து தாய்மையைப் பரிசாகப் பெறாமலேயே இறந்தவர்கள்.

www.aanmeegamalar.com




இதனாலேயே சராசரி பெண்கள் தெய்வ நிலைக்கு உயர்ந்து விடுகிறார்கள்.

சுமங்கலிகள் கன்னி தெய்வங்களை வழிபட்டால் மாங்கல்ய பலம் அதிகரிக்கும்.

கன்னிப்பெண்களுக்குவிரைவில் திருமணம் யோகம் கை கூடும் என்று பொதுவானநம்பிக்கை இருப்பதாலே கன்னியை வணங்கும் வழக்கம் கிராமத்தில் துவங்கி பட்டணம் வரை தொடர்ந்து வருகிறது.

இந்த தெய்வங்களுக்கு ஆடி மற்றும் தை மாதங்களில் சிறப்பான பூஜைகள்செய் வது வழக்கம்.

பெரும்பாலும் செவ்வாய்கிழமைதான்கன்னிக்கு ஏற்ற நாள்.

எனவே அந்த நாளில் வணங்குவதை பலர் கடைபிடித்து வருகின்றனர். மேற்கண்ட மாதங்களில் வணங்க முடியாதவர்கள் தை மாதம் இரண்டாம் நாளில் கன்னிக்கு பூஜை வைத்து வணங்குவார்கள்.

தங்கள் குலதெய்வத்தினை பங்குனி உத்திரத்தில் வணங்கும் போது கூட மறவாமல் வீட்டில் உள்ள கன்னிகளையும் வணங்கும் வழக்கம் நம் நாட்டில் காணப்படுகிறது.

பொதுவாக ஒரு வீட்டின் திசைகளைக் கன்னி மூலை, அக்னி மூலை, வாயு மூலை, ஈசான மூலை என பிரித்துக் கூறுவதுண்டு.

அதில், வடகிழக்கு மூலை இறைவனுக்குரிய ஈசான மூலை என்றால், தென்மேற்கு மூலை கன்னி தெய்வத்துக்குரிய கன்னி மூலை என தனி மூலை இருப்பதே... கன்னி வழிபாட்டின் முக்கியத்துவத்தினை உணர்த்தும் விதமாக உள்ளது.

பெரும்பாலும் இறைவழிபாட்டுக்கு இணையான வழிபாடாக கன்னி தெய்வ வழிபாடுகள் போற்றப் படுகின்றன.

தமிழர் குடும்பங்களில் நோயாலோ, விபத்தாலோ மடிந்து விட்ட கன்னியரை தெய்வமாகக் கருதி வணங்குகின்றனர்.

குடும்ப ஒற்றுமைக்கு கன்னிதெய்வ வழிபாடு முக்கிய பங்கு வகிக்கிறது.

குடும்பத்தில் பலருக்கு மனஸ்தாபம் இருந்தாலும் கூட கன்னியை வணங்க அனைவரும் கூடிவிட வேண்டும்.

இது குடும்பத்தில் எழுதப்படாத சட்டமாகும்.

ஏன் என்றால் குடும்ப ஒற்றுமை தான் கன்னிக்கு மிக பிடிக்கும்.

அனைவரும் குடும்பத்தோடு நின்று வணங்கினால் கன்னி மனம் குளிர்ந்துவிடும்.

இறந்த பெண் வயதுக்கு ஏற்ப அவர்களுக்கு உடை எடுத்து வைப்பார்கள்.

சிறுமிகளுக்கு அதற்கேற்ற ஆடைகளும், இளம் பெண்ணுக்கு பாவாடை சட்டை தாவணியும், அதை விட பெரிய பெண்ணுக்கு சேலை சட்டையும் வாங்கி வைத்து வணங்குவார்கள்.

அந்திக் கருக்கலில் கன்னியை வணங்க துவங்குகிறார்கள்.

இளநார்பெட்டி ஒன்றில் மஞ்சள் கிழங்கு,சிற்றாடை அல்லது சேலை, கண்ணாடி, சீப்பு, வளையல் வைத்து, பிச்சிப்பூ அல்லது மரிக்கொழுந்து படைத்து, சாம்பிராணி மணத்தை வீடு முழுவதும் நிரப்பி, முற்றத்தில் நீர் தெளித்து கன்னியை வரவேற்று வழிபடுகிறார்கள்.

இந்த நார்ப்பெட்டிக்கு கன்னிப்பெட்டி என்று பெயர். கன்னிப்பெட்டியை வைக்கும்போது அந்தக் குடும்பத்தில் உள்ள பூப்படைந்த பெண்ணுக்கு அருள் வந்து மூச்சிரைக்கும்.

அவரிடம் தங்களது குறைகளை முறையிட்டு தீர்க்குமாறு குடும்பத்தினர் வேண்டுவர்.

தன்னை மறக்காமல் வழிபட்டால் துயரத்தைப் போக்கி குடும்பத்தை தழைத்தோங்கச்செய்வதாக அவரிடமிருந்து அருள்வாக்கு கும்பிடுபவர்களுககு கிடைக்கும்.

பின்னர் கன்னி மூலையில் உயரமான இடத்தில் இளநார்பெட்டியை வைத்து விடுவார்கள்.

முதலாண்டு வைத்து படைத்த கன்னிப்பெட்டியை மறு ஆண்டுதான் எடுப்பார்கள்.

கன்னி பெட்டியை அதிகாலையில் எடுக்கும் போது வீட்டை சுத்தம் செய்வார்கள்.

கன்னிப் பெட்டியைத் திறக்கும் போது,அதில் கடந்த ஆண்டு வைத்த மஞ்சள் முளை விட்டிருந்

தால், கன்னி தெய்வம் துடியாக இருப்பதாக நம்பிக்கை.

அதற்குள் வைத்திருந்த துணியை குடும்பத்தில் உள்ள பெண்ணுக்கு உடுத்தக் கொடுப்பார்கள்.

இந்தக் கன்னிப் பொங்கல் தமிழகத்தின் பல பகுதிகளில் அவரவர்கள் பாணிக்கு ஏற்ப கொண்டாடப்பட்டு வருகிறது.

துணியை தனது வீட்டில் மணமாகாத பெண்ணுக்கு மட்டுமே கொடுக்க வேண்டும்.

அவர்கள் திருமணம் முடித்து சென்று விட்டால் வேறு வீட்டு பெண்.

எனவே அவர்களுக்கு கன்னிக்கும்பிட்ட துணி கிடைக்காது.

வீட்டுக்கு வந்த மருமகளுக்கு கன்னிக்கு

குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்துதான் படையல் தயார் செய்யவேண்டும்.

பனியாரம், அதிரசம் என இனிப்பு பலகாரம் கன்னிகளுக்கு மிகவும் பிடிக்கும்.

எனவே படையலில் நிச்சயம் பனியாரம், அதிரசம் என இனிப்பு வகைகள் கண்டிப்பாகஇடம்பெறும்.

அதன் பின் வடை பாயாசத்துடன் அனைவரும் ஒரே நேரத்தில் அமர்ந்து சாப்பிடுவார்கள்.

குடும்ப தலைவி அனைவருக்கும் பரிமாறிவிட்டு தானும் ஒரு இடத்தில் இலையை போட்டு அனைவருடன் அமர்ந்து சாப்பிடுவார்கள்.

இந்த சமபந்தி விருந்து கன்னி வழிபாட்டில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்த வழிபாட்டிற்காகவே வருடத்துக்கு ஒரு


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்! .காம்

வணங்கிய துணியை கொடுக்கலாம்.

ஏன் என்றால் அவர் அந்த குடும்பத்தின் பெண். தனது பொருள் கூட தனது குடும்பத்தில் வசிக்கும் ஒருவருக்கே கிடைக்க வேண்டும் என்று கன்னி தெய்வங்களின் எழுதப்படாத சட்டம்.

குடும்ப ஒற்றுமைக்கு இந்த கன்னி வழிபாடு ஒரு சான்றாகும்.

இன்றைய நவீனயுகத்தில் ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும் பொருள் தேட திரைகடல் தாண்டி தேடி ஓடி விடுகிறார்கள்.

எப்போதாவது கல்யாணம், கோயில் கொடை என்றால் கூட அவர்கள் ஒன்று சேருவது கடினம்.

ஆனால் கன்னி தெய்வம் குடும்ப உறுப்பினர்களை ஒன்று சேர்க்கும் வழிபாடாகும்.

முறை குடும்பத்தினரை ஒன்று சேர்த்துவிடுகிறாள்.

உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் உறவை தேடி ஓடி வருகிறார்கள்.

பெரும்பாலுமே ஒரு பெண்ணுக்கு எப்போதுமே தான் பிறந்த வீட்டின் மீது பற்று உண்டு.

இதுபோன்ற கன்னிகளுக்கும் அதுபோலதான் ஆசை.

தன் வீட்டில் அண்ணன் தம்பி என்று உறவு முறைகள் அனைவரும் ஒன்றாக நின்று தம்மை வணங்க வேண்டும் என ஆசைபடுவாள்.

அப்படி வணங்கும் போது மனம் குளிர்ந்து அவர்களுக்கு வேண்டும் வரம் கொடுப்பார்.

இப்போது பல மாநிலங்களில் வசிப்பவர்கள், தங்கள் இடத்துக்கே கன்னியை கொண்டு

சென்று வைத்து வணங்கி வருகிறார்கள்.

பெரும்பாலுமே ஒரு கன்னி ஒரு வீட்டில் துடியாக இருக்கிறார் என்றால் அவ்வீட்டில் செய் வினை கோளாறு நீங்கி விடும். பேய் பிசாசு அண்டாது. நோய் நொடிகள் தீர்ந்து விடும்.

பிறந்த குழந்தை திடிர் திடிரென அழுதால் கூட கன்னிக்கு பூஜை வைக்கவில்லை என்று கன்னி பயங்காட்டுகிறது என கிராமத்தில் பெரியவர்கள் சொல்லுவதை தற்போதும் காணலாம்.

கன்னி தன் தேவைகளை குழந்தை மூலமாக பூர்த்தி செய்து கொள்கிறது.

குழந்தைகளுக்கு கல்வி செல்வம் கிடைக்கவும் கன்னியை வணங்கும் வழக்கம் உள்ளது.

ஒருவர் தனது வீட்டில் கன்னியை வணங்கினால் அவர் வேறு எந்த தெய்வத்தினையும் தேடிப்போய் வணங்க வேண்டிய அவசியம் இல்லை என்பது பெரியோரின் கருத்து.

கன்னிகளில் கதை பலவாறாக பேசப்பட்டு வருகிறது. அதில் பல கதை மனதை உருக்குவதாகவே உள்ளது.

ஒரு குடும்பத்தில் தாய்க்கு தலைமகளாய் இருந்த சிறுமி ஒருவர் இறந்து விட்டாள்.



வருடம் தோறும் இறந்த அந்த பெண்ணுக்கு பாவடை சட்டை எடுத்து வைத்து கும்பிடுவதை வழக்கமாக கொண்டிருந்தார்கள்.

23 வருடங்கள் கழிந்தது.

ஒரு நாள் அந்தபெண் தாயின் கனவில் தோன்றி, ‘தாயே.. எனக்கு 23 வயதாகி விட்டது.. இன்னும் எனக்கு பாவடை சட்டைதானா...போதவில்லையே’ என கண்ணீர்மல்ககேட்க அந்த ஆண்டு முதல் அவளுக்கு சேலை சட்டை வாங்கி வைத்து வணங்க ஆரம்பித்தனர்.

அந்த அளவுக்கு கன்னிதெய்வம் குடும்பத்தில் ஒரு உறுப்பினராக மறைந்து வாழும் குழந்தை யாகவே வணங்கப் படுகிறது.





மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்


ஒரு வீட்டில் கன்னி தெய்வத்தினை வணங்கவே மறந்து விட்டனர். அவ்வீட்டில் பிறந்த குழந்தை தினமும் இரவு பயந்து அழுது கொண்டே இருந்தது.

ஒரு நாள் வைத்தியர் ஒருவர் உங்கள் கன்னி தெய்வத்தை வணங்குங்கள் எல்லாம் சரியாகி விடும் என கூற, கன்னியை வணங்கி கன்னிமூலையில் குழந்தையை கிடத்தி எடுத்த பிறகு அழுகை நின்று விட்டதாம்.

இதுபோல் கன்னி தெய்வங்கள் இந்த நவீன யுகத்திலும் பிரதான தெய்வமாக விளங்கி வருகிறது.

பல அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து கொண்டிருக்கிறது.


தற்போது பனை தொழில் முழுவதும் குன்றி விட்டது. நார் பெட்டி போன்ற பொருள்கள் காட்சி பொருளாக மாறிவிட்டது.

நவீன யுகத்தில் கன்னி நார் பெட்டி மட்டும் தாயரிக்கும் பணி நடந்து வருகிறது.

பல கிராமங்களில் பல வீடுகளில் இந்த நார் பெட்டி பல வண்ணத்தில் தொங்கி கொண்டிருப்பதை நாம் இப்போதும் காணலாம்.

பழமையை பறைசாற்றும் இந்த வழிபாடு, பல வரலாறுகளை சுமந்து கொண்டு தமிழரின் பண்பாட்டை இன்றும் பறைசாற்றிக் கொண்டு தான் இருக்கிறது.

# தென்னிந்தியர்கள் மேற்கொள்ளும்
# காசியாத்திரை



அனைத்து இந்துக்களும் தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது காசிக்குச் செல்வதை மிகவும் புண்ணியமாக கருதுகின்றனர். தென்னிந் தியர்கள் காசி யாத்திரை மேற்கொள்கிறார்கள், அதில் மூன்று இடங்களில் சடங்குகள் நடத்தப் படுகின்றன. ப்ரயாக்ராஜ், காசி மற்றும் கயா ஆகியவை இதில் ஈடுபட்டுள்ளன. காசியில் பொதுவாக செய்யப்படும் சடங்குகள் சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. மகா பிராயச்சித்தம்.
2. மகா சங்கல்பம்
3. மணிகர்ணிகா ஸ்நானம்
4. பஞ்சகட்ட பிண்டம்
5. கங்கா பூஜை/தம்பதி பூஜை
6. விஸ்வநாத அபிஷேகம்
7. அன்னபூர்ணா/விஷாலாக்ஷி அர்ச்சனை
8. கால பைரவ சமாராதனை
9. கபீர் நகர் காலனிக்கு செல்லும் வழியில் துர்க்கை கோயிலுக்கு எதிரே அமைந்துள்ள பஞ்ச கவுடி மாதா கோயில் வழிபாடு.

மேலே உள்ள சடங்குகள் பொதுவாக 23 நாட்கள் ஆகலாம். மூன்று நாட்கள்சிறந்ததாக இருக்கும், மேலும் 2 நாட்கள் மட்டுமே ஒதுக்கப்பட் டால், சில சடங்குகள் குறைக் கப்பட நேரிடும்.

மணி கர்ணிகா ஸ்நானம் மற்றும் பஞ்சகங்கா பிண் டம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி, வாசகர்கள் தயவு செய்து வேறு இடங் களில் ஐந்து முக்கியமான கட்டங்களை பற்றி கூறியுள்ள விவரங்களில் படித்தறியவும். மேலே குறிப் பிட்டுள்ள கோயில்களைப் பற்றி, பக்தர்கள் தயவுசெய்து அந்தந்த கோயில்களின் எழுத்துப் பதிவைச் சென்று பார்க்கலாம்.




www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்

### பாதகமான கிரக நிலைகள்

| | |
|---|---|
| சூரியன் | கபஸ்தீஸ்வரர், அனைத்து ஆதித்யர்களும் |
| சந்திரன் | சந்திரேஸ்வரர் |
| செவ்வாய் | மங்களேஸ்வரர் |
| பாதகமான செவ்வாயால் அதிக கோபம் | காமேஸ்வரர் |
| புதன் | புதேஸ்வரர் |
| வியாழன் | பிருஹஸ்பதீஸ்வரர் |

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.



| | |
|---|---|
| சுக்ரன் | சுக்ரேஸ்வரர் |
| சனி | சனீஸ்வரர் |

## பிற நோக்கங்கள்

| | |
|---|---|
| தொழுநோய் மற்றும் அனைத்து தோல் நோய்களும் | சாம்ப ஆதித்யா, லோலார்க் |
| திருமணம் தாமதம் | மங்கள கௌரி, முக நிர்மலிகா |
| செல்வச் செழிப்பை அடைய | மகா லக்ஷ்மி கௌரி |
| மனவலிமை குறைவு | திரிபுர பைரவி சந்திரேஸ்வரர் |
| கல்வியில் சிறந்து விளங்க | மகாசித்தேஸவரர், வித்யேஸ்வரர் |
| ஜுரம் ஒழிப்பு | ஜுவரஹரேஸ்வரர், ஜராசந்தேஸ்வரர் |
| போட்டிகளில் வெற்றி | வாராஹி |
| கால சர்ப்ப தோஷ நிவாரணம் | வாசுகேஸ்வரர், கார்கோடக நாகேஸ்வரர் |
| அகால மரண பயம் | மிருத்யுஞ்சய், அமிர்தேஸ்வரர், மஹாகாலேஸ்வரர் |
| அனைத்து வகையான குறுகிய மனநிலை (கோபம்) | கபர்தீஸ்வரர் |

## முக்கிய ஆன்மீக தினங்கள்

வழிபடவேண்டிய முக்கிய நாட்கள் மற்றும் தெய்வங்கள் கீழே கொடுக்கப்ட்டுள்ளன சரியான ஆங்கில தேதிகளை தீர்மானிக்க, பக்தர்கள் தயவுசெய்து பஞ்சாங்கத்தை பார்க்கவும்.

| | |
|---|---|
| சைத்ர சுக்ல பிரதமை முதல் நவமி வரை | ஒன்பது கௌரிகள் |
| சைத்ர சுக்ல த்ரிதீயா | விஸ்வ புஜ கௌரீ |
| சைத்ர சுக்ல அஷ்டமி | பவானி (அன்னபூர்ணா) 108 வலம் வருதல் |
| சைத்ர சுக்ல திரயோதசி | காமேஸவரர் |
| சைத்ர சுக்ல சதுர்தசி | பசுபதேஸ்வரர் |
| சைத்ர பூர்ணிமா | கிருதி வசேஸ்வரர், சந்திரேஸ்வரர், கேதாரேஸ்வரர் |
| வைஷாக் சுக்ல திரிதீய (அக்ஷய் திரிதீய) | திரிலோச்சன், பில்பிலா தீர்த்தம், பாதோதக தீர்த்தம், வாமன் கேசவ் (மதுசூதன்) |
| வைஷாக் சுக்ல சதுர்தசி (நரசிம்ம ஜெயந்தி) | ஓம்காரேஸ்வரர், அனைத்து நரசிம்ம கோவில்கள் |
| ஜ்யேஷ்ட சுக்ல அஷ்டமி | ஜ்யேஷ்டா கௌரி |
| ஜ்யேஷ்ட சுக்ல தசமி + ஹஸ்தம் + புதன் | கங்கா பூஜை |
| ஜ்யேஷ்டா சுக்ல சதுர்தசி | ஜ்யேஷ்டேஸ்வரர், ஜ்யேஷ்ட விநாயக் |
| ஆஷாட சுக்ல சதுர்த்தசி + திங்கள் + அனுஷ நட்சத்திரம் | ஜெயகீஷ் குகை, ஜெயகீஸவரர் |
| ஆஷாட பூர்ணிமா | ஆஷாடேஸ்வரர் |
| சிராவண (முழு மாதம்) | அனைத்து சிவன் கோவில்கள் |
| சிராவண சுக்ல பஞ் சாமி (நாக பஞ்சமி) | வாசுகேஸ்வரர், கார்கோடக் நாக், நாகேஸ்வரர் |
| சிராவண சுக்ல சதுர்த்தசி | ஆதி மஹாதேவ் |
| பாத்ரபத் சுக்ல த்ரிதீய | மங்கள கௌரி |
| பாரத்ரபத் சுக்ல சதுர்த்தி | டுண்டி கணபதி |
| பாத்ரபத் சுக்ல ஷஷ்டி | லோலார்க் |
| பாத்ரபத் சுக்ல அஷ்டமி | மஹாலக்ஷ்மி (சோரஹியா மேளா–16 நாட்கள்) |

www.aanmeegamalar.com

| | |
|---|---|
| அஷ்வின் சுக்லா பிரதமை முதல் நவமி | விஸ்வ புஜ கௌரி |
| கார்த்திக் (மாதம் முழுவதும்) | பஞ்சகங்கா, பிந்து மாதவ், அனைத்து கேசவ் |
| கார்த்திக் சுக்ல அஷ்டமி | தர்மேஸ்வரர் |
| கார்த்திக் சுக்ல ஏகாதசி (பிரபோதினி ஏகாதசி) | பஞ்ச கங்கா, பிந்து மாதவ் |
| கார்த்திக் சுக்ல சதுர்த்தி | காசி விஸ்வநாதர் |
| மார்கசீர சுக்ல ஷஷ்டி | மால்தீஸ்வரர், லோலார்க் |
| மார்கசீர சுக்ல ஏகாதசி முதல் பூர்ணிமா வரை | பாதோதக், வருண சங்கம், ஆதிகேசவ் |
| மார்கசீர சுக்ல சதுர்தசி | பிசாச மோசன், கபர்தீஸ்வரர், கோபி கோவிந்த் |
| பௌஷ் சப்தமி அல்லது ஷஷ்டி+ஞாயிறு | உத்திரார்க் ஆதித்யா |
| பௌஷ் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் | நர நாராயணன், அனைத்து ஆதித்ய கோவில்களிலும் |
| மாக சுக்ல சப்தமி | லோலார்க், சாம்ப ஆதித்யா |
| மாக சுக்ல சப்தமி+ஞாயிறு | கேசவ் ஆதித்யா |
| மாக சுக்ல சதுர்த்தி | விநாயகர் |
| மாக மாதம் | பிரயாக் தீர்த்த ஸ்னான் (தசாஸ்வமேதம்) |
| ஏதேனும் ஷஷ்டி அல்லது சப்தமி+ஞாயிறு | ஆதித்ய கோவில், கபஸ்தீஸ்வரர் |
| அனைத்து ஏகாதசி | விஷ்ணு கோவில்கள் |
| அனைத்து பிரதோஷ (அந்தி நேரம்) | சிவன் கோவில்கள் |
| | காமேஸ்வரர் |
| திங்கள்+சந்திர கிரகணம் | புதின கங்கை நதியில் நீராடுதல் |
| ஞாயிறு+சூரிய கிரகணம் | புனித கங்கை நதியில் நீராடுதல் |
| பூரட்டாதி+பூர்ணிமா | பத்ரேஸ்வரர் |
| சாராதேய நவராத்திரி (செப்./அக்.) | ஒன்பது துர்க்கைகள் |

## காசியில் உள்ள பல்வேறு சக்தி பீடங்கள்

ஸ்கந்த புராணம், காசி காண்டம், அத்தியாயம் 79 பல்வேறு சக்தி பீடங்களைக் குறிப்பிடுகிறது. பக்தர்களின் கவனத்திற்காக. மற்ற தலங்களில் வழிபடுவதை விட இந்த சக்தி பீடங்களில் ஒரு பக்தன் வழிபட்டால் பல மடங்கு நன்மைகளைப் பெறுவான் என்றும் இங்கு குறிப்பிடுகிறோம். வாரணாசி/காசியில் கீழக்கண்டவாறு பல பீடங்கள் (மற்றும் அருகாமையில் உள்ள தெய்வங்கள்) உள்ளன:

| | |
|---|---|
| விரஜா பீடம் | திரிலோச்சன், நர்மதேஸ்வரர், காமேஸ்வரர் |
| மஹா பீடம் | ஆதி மஹாதேவ். பார்வதீஸ்வரர், மோதக பிரிய விநாயகர் |
| ஆதி கேசவ பீடம் | ஆதி கேசவ், வருண சங்கமேஸ்வரர், நக்ஷத்ரேஸ்வரர் |
| மங்கள் பீடம் | மங்கள் கௌரி கோவில் பகுதி மற்றும் பிந்து மாதவ கோவில் பகுதி |
| பஞ்ச முத்ரா மஹா பீடம் | ஆத்ம வீரேஸ்வரர், காத்யாயனி, சங்கடா தேவி |
| சித்தேஸ்வரி பீடம் | சித்தேஸ்வரி தேவி, சந்திரேஸ்வரர் |
| மஹாலக்ஷ்மி பீடம் | மகாலக்ஷ்மி கோவில், லட்சுமி குண்ட் பகுதி |
| தர்ம பீடம் | தர்மேஸ்வரர். விஸ்வபுஜ கௌரி, விசாலாக்ஷி கௌரி மற்றும் பிற தெய்வங்கள் |
| பீஷ்ம சண்டி பீடம் | சண்டி தேவி சண்டீஸ்வரர் |
| துர்கா பீடம் | துர்கா கோயில் மற்றும் பிற தெய்வங்கள் |
| காளி பீடம் | கல்ராததிரி கோவில் சுக்ரேஸ்வரர் |
| காமாக்யா பீடம் | காமாக்யா (காமாக்ஷி) கோவில் |
| கிருத்தி வாசா பீடம் | கிருத்தி வாசேஸ்வரர், மிருத்யுஞ்சய மஹாதேவ், மஹா காலேஸ்வரர் |

www.aanmeegamalar.com

## காசியில் உள்ள பன்னிரு ஜோதிர் லிங்கங்கள்

அகில இந்திய அளவில், பன்னிரு ஜோதிர் லிங்கங்கள் உள்ள கோவில்கள் உள்ளன.

காசி யிலும் பன்னிரு சக்திவாய்ந்த லிங்கங்கள், ஜோதிர் லிங்கங்களாக பூஜிக்கப் படுகின்றன.

பல சிவ பக்தர்கள் காசியில் விசேஷ தினங் களில் துவாதச ஜோதிர் லிங்க யாத்திரை மேற் கொள் கின்றனர்.

| அகில இந்திய அளவில் | புனித காசி நகரத்தில் |
| --- | --- |
| ஸோம்நாத், சௌராஷ்டரம் | ஸோமேஸ்வரர், மான் மந்திர் காட் |
| மல்லிகார்ஜுனர், ஸ்ரீசைலம் | த்ரிபுராந்தகேஸ்வரர், ஸிக்ரா |
| மஹா காலேஸ்வரர், | உஜ்ஜயினி மஹாகாலேஸ்வரர், தாரா நகர். |
| ஓங்காரேஸ்வரர் (இந்தூர் அருகில்) | ஓங்காரேஸ்வரர், மசோதரி பின்புறம் |
| பைஜ்நாதர் (மஹாராஷ்ட்ரா / ஜார்கண்ட்) | பைஜ்நாதேஸ்வரர், காமாச்சா |
| பீமா சங்கர், நாசிக் பூனா சாலையில் | பைஜ்நாதேஸ்வரர், காமாச்சா |
| ராமேஸ்வரர் (தமிழ் நாடு) | கணேஸ்வரர் (ராமேஸ்வரர்) மான் மந்திர் காட் |
| நாகேஸ்வரர் (மஹாராஷ்டரா / துவாரகா) | நாகேஸ்வரர், போசலா காட் |
| விஸ்வேஸ்வரர் வாரணாசி | விஸ்வேஸ்வரர் வாரணாசி |
| த்ரயம்பகேஸ்வரர் (நாசிக்) | த்ரயம்பகேஸ்வரர் (கோடோவ்லியா) |
| கேதாரேஸ்வரர் (உத்தராகண்ட்) | கேதாரேஸ்வரர் (கேதார் காட்) |
| கிரிஸ்னேஸ்வரர் (மஹாராஷ்டிரா) | கிரிஸ்னேஸ்வரர், காமாக்யா தேவி கோவில் |

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

# விரதங்களுக்கு உகந்த செவ்வாய்க்கிழமை

முருகப்பெருமான், சக்தி தேவி, அம்பிகைக்கு உகந்த நாளான செவ்வாய்க்கிழமை இந்த தெய்வங்களை வணங்கினால் கவலைகள் அகலும். செந்நிற ஆடை அணிந்து வழிபாட்டில் பங்கேற்பது; நைவேத்தியமாக செந்நிற கனிவைத்து தீபாராதனை செய்ய வேண்டும்.

கார்த்திகை நட்சத்திரம் அல்லது விசாக நட்சத்திரம் அல் லது விசாக நட்சத்திரம் அமைந்த செவ்வாய்க்கிழமை விரதத்திற்கு பலன் அதிகம் உண்டு.

வீட்டு பூஜையறையின் நடுவில் வேல் வைத்து இருபுறமும் இரு விளக்குகள் வைத்து ஒரு விளக்கில் மூன்று திரிகளும், மற்றொரு விளக்கில் மூன்று திரிகளும் ஆக ஆறு தீபமிட்டு ஆறுமுகற வழி செய்து வந்தால், சீரும் சிறப்பும் வந்து சேரும்.

இந்த விரதத்தை மேற்கொள் ளும் போது, முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் உள்ள படம் வழிபட வேண்டும்.

செவ்வாய்கிழமை பிறந்த வர்களும், மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள், ரத்த சம்பந்தமான நோய் இருப்பவர்கள், ஒன்பது வாரம் இல்லத்தில் விரதம் இருந்து 10வது வாரம் பலன் தரும் பரிகார தலத்திற்கு சென்று வழிபட்டால், நிலைமை சீராகும். வாழ்வு சிறக்கும்.



# வியர்த்த முருகன் சிலை வியந்த வெள்ளைக்காரன்



சர்வ அலங்காரங்களுடன் எம்பருமான் கந்த வேல் திருசெந்தூரில் உள்ள வசந்த மண்டபத்தில் எழுந்தருளி யிருக்கிறான். அப்போது (1803 ஆம் ஆண்டு) திருநெல்வேலி மாவட்டட கலக்டராக இருந்த லூசிங்டன் பிரபு என்பவர் திருச்செந்தூர் வந் திருந்தார். முருகனுக்கு நடைபெறும் வழிபாடுகளை கண்டார்.

இறைவனுக்கு அளிக்கப்படும் சோடச உபசாரம் எனப்படும் பதினாறு வகை உபசாரங்களுள் விசிறி வீசுதலும் ஒன்று. சுப்ரமணிய சுவாமிக்கு அர்ச்சகர் வெள்ளியிலான விசிறியை வீசுவதை கண்டார் லூசிங்டன்.

அங்கிருந்த பக்தர்களிடம், "உங்கள் கடவு ளுக்கு வியர்க்குமோ? விசிறியை வைத்து வீசுகிறீர்கள்..?" என்று கேலி செய்தார்.

அர்ச்சகருக்கு என்ன சொல்வது என்றுதெரிய வில்லை. துணிவை வரவழைத்துக் கொண்டு, "ஆம்... எங்கள் சண்முகனுக்கு வியர்க்கும்.." என்று கூறி, முருகன்அணிந்திருந்த மாலையையும் கவசத்தையும் அகற்றி காண்பித்தார்.

முருகன் திரு மேனியில் திட்டு திட்டாக வியர்வை அரும்பி யிருந்ததை கண்டு வியந்தார் லூசிங்டன்.

வீடு திரும்பிய கலக்டருக்கு அதிர்ச்சி காத் திருந்தது. மனைவி யின் வடிவில். ஆம்... அவர் மனைவி திடீரென கடுமையான வாயிற்று வலியினால் துடித்தார். சூலை நோய் என்பார்கள். இந்நோய் கண்ட வர்களுக்கு நெருப்பு கங்கு களை விழுங்கியதை போல வயிறு வலிக்கும்.

முருகனின் வழிபாட்டை ஏளனம் செய்ததே இதற்கு காரணம் என்பதை லூசிங்டன் உணர்ந்து கொண்டார்.

உடனே என்ன செய்வதென்று தெரியவில்லை. தனக்கு கீழே பணியாற்றிக்கொண்டிருந்த கடவுள் நம்பிக்கை மிகுந்த முருக பக்தர் ஒருவ ரிடம் நடந்ததை கூறி, என்ன செய்தால் உங்கள் முருகனின் கோபம் தணியும் ? என்று கேட்டார்.

அவர் கூறிய உபாயத்தின்படி, உடனே திருச் செந்தூர் ஓடோடிச் சென்று "முருகப்பெரு மானே, என்னை மன்னித்து என் மனைவியை காப்பாற்று. அவள் படும் துயரைக் கண்டு என் னால் சகிக்கமுடியவில்லை. உன் ஆலயத் திற்கு தேவையான பொருட்களை நான் என் சொந்த செலவில் வாங்கித் தருகிறேன்"

என்று மனமுருக வேண்டிக்கொள்ள,எங்கும் நிறைந்திருக்கும் பரப்பிரம்மம் முருகப்பெருமானின் தனிபெருங்கருணையினால் லூசிங்டன்பிரபுவின் மனைவிக்கு இருந்த வயிற்றுவலி அதி சயிக்கத் தக்க வகையில் உடனடியாக நீங்கியது.



முருகப் பெருமானின் கருணையை எண்ணி வியந்த லூசிங்டன் பிரபு, சொன்னபடியே வெள் ளிப்பாத்திரங்களை கோவி லுக்கு காணிக்கை கொடுத்தார். அவற்றில் 'லூசிங்க்டன்1803' என்று முத்திரை பொறித்துள்ளார். அவர் கொடுத்த வெள்ளிக்குடம்இன்றள வும் உபயோகத்தில்உள்ளது.

அதில் 'லூசிங்க்டன் 1803'என்ற முத்திரை யை இப்போதும் நீங் கள் காணலாம்.

# ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்** மெயில்

புத்தகத்தில் (e-book)

வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

**170** க்கும் மேற்பட்ட

இதழ்களை




# aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.

# ஆடி மாதத்தில் வழிபடவேண்டிய அம்மன் ஆலயங்கள்



## சமயபுரம்

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் உக்கிர மாக வைணவி எனும் திருப்பெயரோடு வீற்றிருந் தாள். அம்பாளின் உக்கிரம் காரணமாக கண்ணனூரி லுள்ள மேட்டின் மீது வைத்தார்கள்.

இந்த அம்மனிடம், விஜயநகர மன்னர் ஒருவர், ‘‘தென்னாட்டில் எங்கள் படை போரிட்டு வெற்றி பெற்றால் உனக்கு இங்கு கோயில் எழுப்புவோம்’’ என்று வேண்டிக் கொண்டார். மாரியின் அருளால் போரில் வென்றான். அந்த மன்னன் அம்மனுக்கு ஒரு கோவில் கட்டினான், இந்த கண்ணனூர் அம்மன்தான் சமயபுரத்து மாரியம்மனாக இன்று பேரருளை பொழிகிறாள்.

வெட்ட வெளியில் இருந்த அம்மனைகோயி லுக்குள் அமர்த்தி அழகு பார்த்தான். பரிவார தெய்வங்களாக விநாயக ரையும், கருப்பண்ண சாமியும் பிரதிஷ்டை செய் தனர். தமிழகத்தின் முக்கிய சக்தித் தலங்களில் ஒன்றாக விளங்கு கிறது.

ஆன்மிகமலர்.காம்

## வீரபாண்டி கௌமாரி

மதுரையை ஆண்ட மன்னன் வீரபாண்டிய னுக்கு இரு கண்களும் பாதிப்பட்டன. அரசன் பார்வை பெறவேண்டி ஈசனை நோக்கி தவமி ருந்தான். ஈசனும், ‘‘புள்ளைநல்லூரியில் கண்ணு டைய தேவி தவமிருக்கிறாள். அவளுக்காக கோயில் எழுப்பு’’ என்று அருளாணையிட்டார்.

மன்னனும் அதை ஏற்று கோயில் கட்டினான். கண் பார்வை பெற்றான். வீரபாண்டி மாரி என்று அம்மனும் வழிபடப்பட்டு வருகிறாள். இன்றும் பார்வைக் கோளாறு உள்ளவர்கள் இத்தலத்தை நோக்கி வந்து நலம் பெறுகிறார்கள். தேனி – கம்பம் வழியில் தேனியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது.

## தஞ்சாவூர் வடபத்ரகாளி

சும்பன் நிசும்பன் எனும் அசுரர்களின் அட்டகாசத்தை பொறுக்க முடியாத தேவர்கள் தேவியைநோக்கி துதித்தனர். தேவி காளியாக கௌசீகி எனும் பெயரோடு வெளிப்பட்டு அசுரர்களை வதைத்தாள்.

அதனாலேயே நிசும்பசூதனி எனும் பெயர் வழங்கப்படுகிறது. விஜயாலயச் சோழன் முதல் ராஜராஜன், ராஜேந்திரன் என்று மாபெரும் சோழ அரசர்கள் இந்த காளியை வணங்கிச் சென் றனர். தீய சக்தியால் பாதிக்கப்பட்டவர்கள் இத் தல மண்ணை மிதித்தாலே போதும். தெளிவு பெறுவது நிச்சயம். தஞ்சை பூமால் ராவுத்தர் கோயில் தெருவில் வடபத்ரகாளியம்மன் எனும் பெயரில் உள்ள நிசும்ப சூதனி ஆலயம் அமைந்துள்ளது.

## நத்தம் மாரியம்மன்

மதுரை சிற்றரசர்களில் ஒருவரான சொக்கலிங்க நாயக்கரின் அரசபீடத்தை அலங்கரித்த தெய்வமே நத்தம் மாரியம்மன் ஆகும். அரண்மனைக்கு பால் அளக்கும் ஒருவன் பக்கத்து சிற்றூரிலிருந்து குடத்தில் பால் கொணர்வான். பாலைக் கறந்து குறிப்பிட்ட இடத்தில் இறக்கி விட்டுத் திரும்பிப் பார்க்க பால் குடம் தானாக காலியாகி கிடந்தது. அரசனுக்கு இந்த விஷயம் சென்றது.

சோதித்துப் பார்க்கும்போதும் அப்படியேநடந்தது. மன்னன் அந்த இடத்தை தோண்டச் சொன்னார். ரத்தம் பீறிட்டது. அம்மனின் சிலை தெரிந்தது. அங்கேயே அரசன் அம்மனுக்கு கோயிலைக் கட்டினான். இத்தலம் திண்டுக்கல்லுக்கு அருகேயே உள்ளது. நோய் தீர்க்கும் தேவியாக நத்தம் அம்மன் விளங்குகிறாள்.

## இருக்கன்குடி-மாரியம்மன்

விருதுநகர் மாவட்டம் சாத்தூரிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது இருக்கன்குடி–மாரியம்மன். சதுரகிரியில் வாழ்ந்த சிவயோகி ஞானசித்தர் என்பவர் பராசக்தியை நோக்கி தவமிருந்தார். தான் யோக நிஷ்டையாகும் இடத்தில் மாரியம்மனாக அருள்பாலிக்க வேண்டுமென வரம் கோரினார். அன்னையும் அவ்வாறே அருளினாள்.



வெள்ளப் பெருக்கால் அழிந்துவிட்ட கிராமத்திலுள்ள மாரியம்மன் சிலையொன்று சித்தர் ஐக்கியமான பூமிக்குள் வந்து புதைந்தது. பூசாரிப் பெண் ஒருத்தி சாணக்கூடையை வைத்து எடுக்க முயன்றபோது தூக்க முடியவில்லை.

அப்போது அங்கு பூசாரிப் பெண்ணுக்கு அருள்வந்து தான் மாரியம்மனாக இங்கிருப்பதாக வாக்களித்தாள். சில ஆயிரம் குடும்பங்களுக்கு இவள்தான் குலதேவதை.

## மேல்மலையனூர் அங்காளபரமேஸ்வரி

பிரம்மனின் கர்வத்தை அடக்குவதற்காக ஈசன் பிரம்மனின் ஐந்தாவது தலையை பிய்த்துப் போட்டார். பிரம்மனின் தலையை கொய்த பாவமும், சரஸ்வதியின் சாபமும் ஈசனைத் துரத்தின. திருவோடு ஏந்தி பசியோடு ஈசன் அலைந்தார். இத்தலத்தில்தான் புற்றுருவாக பார்வதி எழுந்தருளி பிரம்ம கபாலத்தை ஈசனிடமிருந்து பறித்து சாப நிவர்த்தி பெற்றுத் தந்தாள்.

எளிமையான மக்களிடையே அவர்களுக்குள் ஒருத்தியாக அங்காளம்மன் புற்றுக்கு பின்னால் எழுந்தருளியிருக்கிறாள். பிரதி அமாவாசையன்று பல லட்சம் பக்தர்கள் இங்கு கூடுவார்கள். திண்டிவனம் – செஞ்சி சாலையின் நடுவே பிரியும்

சாலையிலிருந்து 15 கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. சகல தோஷங்களையும் சிதறடிக்கும் சீரியவள் இவள்.

## கோவை சௌடாம்பிகை

ஈசனின் ஆணைப்படி தேவலன் எனும் முனிவர் திருமாலை நோக்கி தவமிருந்தார். அசுரர்கள் அவரை தொந்தரவு செய்த வண்ணம் இருந்தனர். அவர்களின் தொல்லையை திரு மாலின் சக்ராயுதம் தடுத்தது. அதையும் தாண்டி ஒரு அம்பு தேவலனை துளைத்தது. அப் போதுதான் அம்பாள் சௌடாம்பிகை எனும் திருநாமத்தோடு எழுந்தருளி காத்தாள்.

இக்கோயிலில் அனைத்து தெய்வங்களின் சந்நதிகளும் ஒருங்கே அமைந்துள்ளன. மனதின் வேதனை போக்குவதில் இவள் மகாதேவி. ஆடி வெள்ளியின் ஒவ்வொரு வாரத்திற்கும் ஒவ்வொரு அலங்காரம் என அழகாக ஜொலிக்கிறாள். இக் கோயிலிலுள்ள அஷ்ட லட்சுமி சந்நதியை நிச்சயம் தரிசிக்க வேண்டும். கோவை நகரின் மையத்தில் ராஜவீதியில் கம்பீரமாக வீற்றிருக்கிறாள்.

## புட்லூர் பிள்ளைத்தாய்ச்சி அம்மன்

பார்க்கும்போதே உடலும், உள்ளமும் சிலிர்க் கும். கர்ப்பிணிப் பெண் வடிவில் உலகையே சுமந்து கருணையோடு கால்நீட்டி காட்சி தரும் பிள்ளைத் தாய்ச்சி அம்மனை வேறெந்த தலத்திலும் தரிசிக்க முடியாது. கருவைச் சுமக்கும் பெண்ணின் தாய்மையை, இங்கு உலகைச் சுமந்து வெளிப்படுத்துகிறாள். குழந்தைவரம் வேண்டி தொட்டில் கட்டுவோர்கள் விரைவில் மழலையோடு கண்கலங்க நிற்கிறார்கள். சென்னை, ஆவடி, திருவள்ளூர் வழியில் காக்களூர் நிறுத்தத் திற்கு முன்பாக உள்ளது ராமாபுரம் என்ற புட்லூர். அம்மையை தரிசியுங்கள். ஆனந்தம் பெற்றிடுங் கள்.

## சிதம்பரம் தில்லை காளி

சிதம்பரத்தில் ஈசனோடு போட்டியிட்டு நடனம் புரிந்து தோற்றவள் தில்லையின் எல்லையில் கருணையோடு வீற்றிருக்கிறாள். அலகிலா விளை யாட்டுடையவனின் பெருமையை உணர்ந்து தானும் அந்த ஆதிசக்தியில் பாதி என்பதை உணர்ந்து, நான்கு முகமான பிரம்ம சாமுண்டியாக கருவறையிலும், உக்கிரகமான காளியாக வெளியே தனி சந்நதியிலும் அமர்ந்திருக்கிறாள்.

உக்கிரம் குறையக் கூடாது என்பதற்காகவே அபிஷேகம் எதுவும் இவளுக்கு செய்யப் படுவதில்லை. தீவினைகளோ, தீயசக்திகளின் பாதிப்புகள் இருந்தால் தில்லை காளியின்



தரிசனத்தில் தகர்ந்து போகும். இந்த ஆலயம் சிதம்பரத்திலேயே உள்ளது.

## மயிலாப்பூர் முண்டகக் கண்ணி

மயிலையின் பேசும் தெய்வம். எப்போது வந்தமர்ந்தாள் என்று தெரியவில்லை. ஆனால், எப்போதுமே பக்தர்களை காக்க இங்குதான்நான் இருக்கப்போகிறேன் என்பதுபோல வீற்றிருக் கிறாள். மூலவருக்கான கருவறை விமானம் இல்லை. கட்ட அவள் உத்தரவு தரவில்லை என்கி றார்கள். அதனாலேயே கீற்றுக் கொட்டைக்குள் கருணை மணம் கமழ வாசம் செய்கிறாள்.

முண்டகம் என்றால் தாமரை என்று பொருள். தாமரை போன்ற கண்களை உடையவள் என்று பொருள். ஞான சூரியனை கண்ட தாமரை மலர்வதுபோல உங்களுக்குள்ளிருக்கும் ஞான தாமரையை இவள் மலர வைப்பாள். உயிரை காப்பாற்றுதலும், உயர்ந்த பதவியில் அமர்த்து தலையும் இவள் இங்கு எளிதாகச் செய்கிறாள். மயிலாப்பூர் நகரத்தின் மையத்திலேயே இவள் கோயில் கொண்டிருக்கிறாள்.

## சிறுவாச்சூர் மதுரகாளியம்மன்

காளியின் அருளால் மதுரையை எரித்தாள் கண்ணகி. அங்கிருந்து சிறுவாச்சூர்செல்லியம்மன்

ஆலயத்திற்கு வந்தாள். செல்லியம்மனோ நீ இங்கு இருக்க வேண்டாம். என்னிடமிருந்து வரம் பெற்ற அரக்கன் ஒருவன் என்னையே அடிமைப்படுத்தி வைத்துள்ளான். கொடுத்த வரத்தை கொடுஞ் செயலுக்கு உபயோகப்படுத்துகிறான். எனவே, நீ இங்கிருந்து சென்று விடு தாயே என்றாள். கண்ணகி கண்கள் மூடி காளியை வணங்கினாள். அரக்கன் வரும் நேரத்திற்காக காத்திருந்தாள். வந்த அரக்கனும் அகம்பாவத்துடன் பேச அங் கேயே அவனை காளிவதம் செய்தாள்.

செல்லியம்மன் மலைமீது குடிகொள்ள மதுரகாளியம்மன் என்று திருப்பெயரோடு காளி கீழே குடிகொண்டாள். திங்கள் மற்றும் வெள்ளி மட்டும்தான் ஆலயம் திறந்திருக்கும். மாவிளக்கு ஏற்றினால் எண்ணமெல்லாம் ஈடேறும். ஆலய வளாகத்திலேயே உரல்களும் உலக்கைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அரிசி கொண்டு வந்து ஊற வைத்து அங்கேயே இடித்து விளக்கேற்றுகின்றனர். குழந்தைப்பேறு வேண்டுவோர், கணவன் மனைவி பிரச்னை இருப்போர் அவசியம் தரிசிக்க வேண்டிய தலம் இது. திருச்சி பெரம்பலூர் நெடுஞ்சாலையில் இத்தலம் உள்ளது.

## அறச்சலூர்
## அறச்சாலை அம்மன்

அறம் வளர்த்த ஊர் என்பதால் அறச்சலூர் அம்மன் என்று பெயர் வந்தது. கம்பீரமான குதிரைகளுக்கு மத்தியில் எண்கரங்களோடு சூரனை வதம் செய்த கையோடு வீற்றிருக்கிறாள். ஜாதகப் பொருத்தமே இல்லை என்றாலும் கூட இந்த அம்மனின் உத்தரவு இருந்தால் போதும் என்கிறார்கள். பூ போட்டு வாக்கு கேட்கிறார்கள். வெள்ளை நிறப் பூக்கள் மூன்றும், சிவப்பு நிறப் பூக்கள் மூன்றும் பயன்படுத்துவர்.

சிவப்பு பூ வந்தால் சுப விசேஷங்கள் நிறைவேறும் என்றும், வெள்ளை நிறப் பூக்கள் வந்தால் வீடு மனை நிலம் வாங்கலாம் என்பதாக அம்மன் உத்தரவிடுகிறாள்.

மாங்கல்ய தோஷம் நீங்க அம்மனுக்கு மாங்கல் யத்தை வைத்து வழிபட்டு அம்மனுக்கே அதை காணிக்கையாகத் தருகிறாள். ஈரோட்டிலிருந்து காங்கேயம் செல்லும் சாலையில் 24வது கிலோமீட்டரில் இக்கோயில் உள்ளது.

## திருவக்கரை வக்ரகாளி

ஆதித்ய சோழரும், பராந்தகரும்,கண்டரா தித்தரும், செம்பியன் மாதேவியாரும் பார்த்துப் பார்த்து சமைத்த கோயில் இது. சந்திர மௌலீஸ் வரர் ஆலயத்திற்கு முன்பாகவே வக்ரகாளி அதிஉக்கிரமாக தனிச்சந்நதியில் வீற்றிருக்கிறாள். வக்ராசுரன் என்பவன் ஈசனை நோக்கித் தவம் புரிந்தான்.

ஈசனின் தரிசனமும் வரங்களும் பெற்றான். தேவலோகத்தை புரட்டிப் போட்டான். கேட்பாரே இல்லாமல் திரிந்தவனை காளி எதிர்கொண்டாள்.

வக்ராசுரனையும், அவள் தங்கையான துன்முகியையும் விஷ்ணுவும் காளியும் முறையே வதம் செய்தனர். வதம் செய்த உக்கிரத்தோடேயே இத்தலத்தில் அமர்ந்தாள்.

இன்றும் அந்த திருவெம்மை அங்கு பரவி யிருப்பதை தரிசிப்போர் நிச்சயம் உணர்வர். ஜாதக ரீதியாகவும், தீயசக்திகளால் பாதிக்கப்பட்டு மனநிலை சரியில்லாதவர்கள் இச்சந்நதிநெருங்கும் போது தெளிவடைவர் என்பது உறுதி. திண்டிவனம் – விழுப்புரம் பாதையில் மயிலத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது.

## திருவேற்காடு கருமாரியம்மன்

வெள்வேல மரங்கள் அதிகமாக இருந்ததால் வேற்காடு என்றானது. வேதங்களையே மரங்க ளாக்கி அதனடியில் லிங்க மூர்த்தத்தில் ஈசன் வெளிப்பட்டார். லிங்கத்தோடு அன்னையும் உதய மானாள். கொடிய அசுரனை அழிக்க முருகனுக்கு கருமாரி அன்னை தம் திருக்கரத்தால் வேல் அளித்தாள். அதனாலேயே வேற்கன்னி ஆனாள். வேலன் வேலால் கீறி தீர்த்தம் உண்டாக்கினான்.

அதுவே வேலாயுத தீர்த்தமாயிற்று. அந்த பராசக்தியே இங்கு மாரியம்மனாக அமர்ந்து எல் லோரையும் காக்கிறாள். கலியுகத்தின் கண்கண்ட தெய்வமே இந்த கருமாரி.

வேண்டுதல் இல்லாம லேயே வேண்டியதை தருவதில் பெற்றவளுக்கும் நிகரற்று விளங்கும் தாய் இவள். இத்தலம் சென்னை பூவிருந்தவல்லிக்கு அருகே உள்ளது.

## மங்கலம்பேட்டை மங்களநாயகி

செவ்வகக் கல் மூர்த்தத்தில் சற்று உக்கிரமாக அருளும் வனதுர்க்கை இவள். கண்ணகிக்கு கோயில் கட்ட சேரன் செங்கூட்டுவன் இமயமலை யிலிருந்து இரு கற்களைக் கொண்டு வந்தபோது தனக்கு மிகப் பெரிய உதவிகளை செய்த பரூர் பாளையத்தை சேர்ந்த குறுநில மன்னனுக்கு தான் கொண்டு வந்து இரு புனிதக் கற்களில் ஒன்றை அவனுக்கு ஈந்தான்.

அதில் ஒன்றில்தான் பரூர் மன்னன்உக்கிர நாயகியான இந்த மங்கலநாயகியை எழுந் தருளச் செய்தான். கடலூர் மாவட்டம், மங்கலம் பேட்டையில் அமைந்துள்ள இக்கோயில் உளுந் தூர் பேட்டையிலிருந்து விருத்தாசலம் செல்லும் சாலையில் 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




இதழ் e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# தடைகளை நீக்கி நல்வாழ்வு தரும்
# சின்னத்தொட்டிபாளையம் நஞ்சுண்டேஸ்வரர்

சிவம் என்றால் அன்பு, இன்பம், மங்களம் என்று பொருள். அன்பாக அருட் பெருஞ்ஜோதியாக, இன்பமாக மங்களமாக மறைபொருளாக எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அந்த பரமனைக் கடல் கொஞ்சும் குமரி முதல் கைலைப் பனிமலை வரை ஆலயங்கள் அமைத்து வழிபட்ட பூமி நம் பாரத புண்ணிய பூமியாகும். அதுபோல எண்ணற்ற சிவாலயங்களில் சின்னத்தொட்டிபாளையம் சிவா லயமும் ஒன்று.

இந்து சமயத்தில் கூறப்பட்டுள்ள மும்மூர்த்தி களுள் ஒருவரான சிவபெருமானை எந்நாளும் தங்கள் மனக்கண் முன் நிறுத்தி தென்னாடுடைய சிவனே போற்றி... எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி... என தங்கள் உதடுகளில் உச்சரித்து ஆராதனை செய்து வந்த ஒரு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் காரமடை அருகில் உள்ள சின்னத்தொட்டிபாளையம் கிராமத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

தங்கள் குல தெய்வமாக கர்நாடக மாநிலம் மைசூரில் உள்ள நஞ்சன்கூடு நஞ்சுண்டேஸ்வர ரை பல தலைமுறையாக வழிபட்டுவந்துள்ளனர். அப்போது தங்கள் கிராமமான சின்னத் தொட்டி பாளையம் பகுதியில் விரைவில் ஒரு சிவாலயம் அமைக்க வேண்டுமென எண்ணி,முதலில் சிவ னுக்கு உகந்த வில்வத்தை தல விருட்சமாக வளர்த்தியும், பின்னர் சிறு மேடை அமைத்து அதன் மேல் சிறிய சிவலிங்கத்தையும், சிறியநந்தி யெம்பெரு மானையும் பிரதிஷ்டை செய்து வழிபாடுகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

ஆண்டுகள் சில கடக்க 1992–ஆம் ஆண்டு இப்பகுதியில் வாழ்ந்து வந்த அதீத சிவபக்தர் ஒரு வரது கனவில் வில்வமரம் வளர்கின்ற இடத்தின் அருகே பெரிய சிவலிங்கம் ஒன்று வெயிலில் காய்வது போலவும், திடீரென அந்த இடத்தில் நிறைய தண்ணீர் ஓடுவது போலவும் அதில் புஷ்பங்கள் மிதந்து வந்து சிவலிங்கத்தை சுற்றி ஆராதிப்பது போல் தோன்றியுள்ளது. காலையில் எழுந்து அவர் கனவில் கண்ட காட்சியை ஊர் மக்களிடம் சொல்ல சிவபெருமான் தனக்கு ஆல யம் எழுப்பிட குறிப்பால் உணர்த்துகிறார் என்பதை உணர்ந்து ஆலயம் அமைக்க முடிவு செய்தனர்.

நிதியுதவியும், பொருளுதவியும் கிடைத்து 1998–ஆம் ஆண்டு அம்பாளுக்கு கருவறை அமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. ஆலயம் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டுக் கொண் டிருந்த அதே சிவ பக்தர் ஆலயம் கட்டுமானப் பணி விரைவாக நடைபெறாமல் தாமதமாகவே நடந்து கொண்டிருக்கிறதே என எண்ணி மனம் வருந்திக்கொண்டு இருந்துள்ளார்.

அப்போது காவியுடை அணிந்து பெரிய ஜடா முடியுடன் கூடிய பெரியவர் வந்து என்ன கோயில் கட்டுகிறீர்கள் என வினவியுள்ளார். சிவாலயம் அமைக்கிறோம் சாமி என சிவ பக்தர் பதிலுரைக்க, நல்ல







படியாக அமையுங்கள். எந்த கவலையும் வேண்டாம். கோயில் மென் மேலும் வளரும் என சொல்லிவிட்டு, எனக்கு கொஞ்சம் அன்னம் கிடைக்குமா என பக்தரிடம் கேட்டுள்ளார்.

இருங்கள் சாமி அருகிலேயே வீடு உள்ளது. அன்னம் எடுத்து வருகிறேன் என்று கூறி வீட்டிற்கு சென்று வருவதற்குள் அந்தப் பெரியவரைக் காணவில்லையாம். நான்கு திசைகளிலும் பார்த்தபோது பெரியவர் சென்று கொண்டிருக்கும் சுவடே தெரியவில்லையாம். ஆலயத் திருப்பணி தாமதமாவதை எண்ணி வருந்திய சிவ பக்தரிடம், ஜடா முடியுடன் பெரியவர் வடிவில் வந்து இந்த ஆலயம் மென் மேலும் வளரும் என ஆசீர்வதித்து நம்பிக்கையளித்ததும், அன்னம் கேட்டுவிட்டு மறைந்து திருவிளையாடல் நிகழ்த்தியதும் அன்னாபிஷேகப் பிரியன் அந்த சிவபெருமான் தான் என்பதை சிவ பக்தரும்,மக்களும் உணர்ந்து கொண்டனர். சிவ பக்தர்கள், ஆன்மிக அன்பர்கள், ஊர்ப் பொதுமக்கள் என எல்லோருடைய முயற்சியாலும் ஆலயம் முழுமையடைந்து கடந்த 2016 ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றுள்ளது.

அப்போது முதல் இப்போது வரை எண்ணற்ற பக்தர்கள் இத்தலத்தில் நாள்தோறும் நடைபெறும் வழிபாடுகளில் கலந்துகொண்டு அந்த மனக்குறை நீக்கும் மகேசனை வழிபட்டு வருகின்றனர்.

கிழக்கு நோக்கிய ஆலயத்தில் அரசமரத்தடியில், ராகு கேதுவுடன் அரசமரத்து பிள்ளையார் வீற்றிருக்கிறார். அவரை தரிசித்த பின்னர் மூலவர் குடிகொண்டுள்ள கருவறையை நாம் காணும் முன் நந்தியெம்பெருமானை வணங்கி அனுமதி பெற்ற பின்னர் கொஞ்சம் முன்பாக நகர்ந்து கருவறையை நோக்கினால் இறைவன் சிவலிங்கத் திருமேனியராக நஞ்சுண்டேஸ்வரர் என்ற திருநாமம் கொண்டு அருள்பாலிக்கிறார்.

வாழ்வில் தடைபடுகின்ற நற்காரியங்கள் யாவும் இவரை வணங்கினால் தடைநீங்கி விரைவில் நடந்தேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

பக்தர்களுக்கு நம்பிக்கையளித்து நல்லன எல்லாம் அருளும் நஞ்சுண்டேஸ்வரருக்கு வில்வ இலை அர்ச்சனை செய்தால் சகல நன்மைகளும் கிட்டும். எம்பெருமான் கருவறையின் கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர்,துர்க்கை ஆகியோர் காட்சி தருகின்றனர்.

இறைவன் சந்நிதிக்கு இடபாகத்தில் உள்ள தனி சந்நிதியின் கருவறையில் இறைவி அமிர்த வர்ஷினி என்ற திருநாமம் கொண்டு அற்புத பேரழகுடன் அருள்மழை பொழிகிறாள் தேவி. இத்தலத்தில் இறைவனுக்கும், இறைவிக்கும் நந்தியெம்பெருமானே வாகனமாக உள்ளார்.

வெளிச்சுற்றில் கன்னிமூல கணபதி, சண்டிகேஸ்வரர், தல விருட்சமான வில்வ மரத்தடியில் ஆதி மூலவர் மற்றும் துணை தெய்வங்கள் அருள்பாலிக்கின்றனர். மேலும் வெளிச்சுற்றில் பாலமுருகன், சூரியன், சந்திரன், சொர்ண பைரவி சமேத சொர்ணாகர்ஷண பைரவர், சனீஸ்வரர், நவநாயகர்கள் ஆகிய தெய்வங்கள் தனித் தனி சந்நிதிகளில் அருள்பாலிக்கின்றனர்.

திங்கள், புதன், வெள்ளி ஆகியநாட்களில் நஞ்சுண்டேஸ்வரருக்கு சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை அம்பிகை அமிர்த வர்ஷினிக்கு சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

இந்நாளில் பெண்கள் அம்பாளுக்கும், இத்தலத்தில் உள்ள புற்றுக்கண்ணுக்கும் சிறப்பு வழிபாடுகளை செய்து வணங்குகின்றனர். தை மற்றும் சித்திரை மாதம் முதல் நாள் இத்தலத்தில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகிறது.மஹா சிவராத்திரி நாளில் நான்குகால சிறப்பு



அபிஷேக,அலங்கார பூஜைகள் நடைபெறுகிறது.

பிரதோஷ வழிபாடு, சோமவார வழிபாடு, குருவார வழிபாடு, சங்கடஹரசதுர்த்தி வழிபாடு, சஷ்டி வழிபாடு, கிருத்திகை வழிபாடு, சனிக்கிழமை சனீஸ்வர பகவான் வழிபாடு, வெள்ளிக்கிழமை துர்க்கை வழிபாடு இவையெல்லாம் இந்த ஆலயத்தின் முக்கியத்துவம் வாய்ந்த விசேஷ நாட்களாகும்.

ஆடி வெள்ளிக்கிழமை நாளில் இறைவி அமிர்தவர்ஷினி அம்பிகைக்கு சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.வழிபாடு முடிந்ததும் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படுகிறது.ஆடி மாதத்தில் சனி தோஷம் உள்ளவர்கள் சிவபெருமானை வழிபட வேண்டும். சாஸ்திரங்களின்படி, ஆடி மாதத்தில் சிவபெருமானை வழிபட்டால் சனி தோஷம் குறை யும்.

பைரவர் வழிபாடு என்பது கால பைரவர் தொடங்கி அஷ்ட பைரவர், அஷ்டாஷ்ட பைரவர் என தொடர்ந்து சொர்ணாகர்ஷன பைரவரில் முடிவது. சொர்ணாகர்ஷன பைரவர் வழிபாடு என்பது வழிபடுபவரின் வாழ்க்கையில் தரித்திரம் தலை காட்டாது காத்து தன, தான்யம், சொர்ணம் முதலிய செல்வ செழிப்பை தரும் சிறப்பு கொண் டது.

சொர்ணாகர்ஷன பைரவர், 64 பைரவர்களுக்கும் அப்பாற்பட்டவர். அஷ்ட லட்சுமிகளுக்கும், குபேரருக் கும் நவ நிதிகளையும் கொடுக்கும் அதிபதி.ஒவ்வொரு தேய்பிறை அஷ்டமி நாளில் இத்தல சொர்ண பைரவி சமேத சொர்ணாகர்ஷண பைரவருக்கு சிறப்பு அபிஷேக,அலங்கார பூஜைகள் நடைபெறுகிறது. இந்த வழிபாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு சொர்ண லாபமும், பயம் நீங்கியும் சர்வ அஷ்ட



சித்தியும் ஏற்படும் என்பது ஐதீகம்.சொர்ண பைரவி சமேதராய் சொர்ணாகர்ஷண பைரவர் அருளும் ஒரு சில தலங்களில் இத்தலமும் ஒன்று என்பது கூடுதல் சிறப்பு.

ஆருத்ரா தரிசன நாளன்று உற்சவ மூர்த் தங்களாக எழுந்தருளுகின்ற அம்மையும் அப்ப னுக்கும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகிறது. சிவபெருமானுக்குரிய முக்கிய விரததின காலங் களில் எண்ணிய நற்காரியங்கள் எண்ணியபடி தடையின்றி நிறைவேறிட நீங்களும் ஒருமுறை இத்தலம் வந்து வழிபட்டு அந்த எம்பெருமான் அருளைப் பெற்றிடுங்கள்.



செ.சு.சரவணகுமார்

திருக்கோயில் அமைவிடம்:

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை சிறுமுகை சாலை யில் 3 கி.மீ தொலைவில் சின்னத் தொட்டிபாளையம் திருக்கோயில் உள்ளது. குறிப்பிட்ட நேரத்திற்கு பேருந்து வசதி இருக்கின்றது. காரமடையிலிருந்து ஆட்டோ வசதி உள்ளது.

தொகுப்பு:
சென்னிவீரம்பாளையம்
செ.சு.சரவணகுமார்
தொடர்புக்கு: 93458 88883.

# ஆன்மிகமலர்
## மெயில் புக்




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










# aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்









# சரபேஸ்வரர் வழிபாடு



சரபேஸ்வரர் வழிபாடு சத்ருக்களை அழித்திடும். சூரியன், சந்திரன் மற்றும் அக்னியே சரபேஸ்வரரின் மூன்று கண்கள்.

சரபேஸ்வரரை ஞாயிற்றுகிழமை ராகு கால வேளையில் (மாலை 4.30–6) வழிபடுவது விசேஷ பலனைத் தரும். சரபேஸ்வரர் பைரவர் அம்சம். இவருக்கு 11 நெய்தீபம் ஏற்றி வணங்குவது விஷேசம்.

சிவன், விஷ்ணு, காளி (பிரத்யங்காரா தேவி), துர்க்கை (சூலினி துர்க்கை) ஆகிய நான்கு மூர்த்திகளும் சேர்ந்த அம்சம்தான் சரபேஸ்வரர்.

எட்டு கால்கள், நீண்ட வால், இரண்டு சிங்க முகங்கள், இரண்டு இறக்கைகள் கொண்டு பெரும் கோபத்துடனும், ஆராவாரத்துடனும் நரசிம் மத்தின் எதிரில் தோன்றி, அசுரனின் ரத்தம் குடித்து மிகவும் செருக்குடன் பகைவர் குலத்தை அழிப்பவரே சரபேஸ்வரர்.

இரணியனது வரத்தின் படியே, அனைத்தும் கலந்த கலவையாய் நரசிம்மமாய் வந்து, இரணி யனை வதம் செய்தார். அசுரனின் குருதி குடித் ததால் மதி மயங்கி ஆக்ரோஷமானார்.

நரசிம்மத்தின் கோபம் தணிக்க வேண்டி தேவர்கள் அனைவரும் பரமனை நாட, பரமன் சரபப் பறவை உரு கொண்டு வந்து நரசிம்மத்தின் கோபம் தணித்தார்.

பிரகலாதன் மற்றும் தேவர்களது நடுக்கத் தினை தீர்த்ததால் சிவன் நடுக்கந்தீர்த்த பெரு மான் என்றானார்.

சரபேஸ்வரர் என்ற சொல்லுக்கு எட்டு கால் களை கொண்ட பறவை, இரண்டு தலைகளை

கொண்ட வடிவம் எனப் பொருள்.

பட்சிகளின் அரசன். சிங்கத்தையே வெல்லும் ஆற்றல் கொண்டது சரபம். இத்திருவடிவம் "சிம் மக்ன மூர்த்தி", "சிம்ஹாரி", நரசிம்ம சம்ஹாரர்" என்றும் அழைக்கப்படுகின்றது.

பறவை போன்ற பொன்னிறம், இரு இறக் கைகள், சிவப்பேறிய கண்கள் இரண்டு, கூரிய நகங்களுடன் கூடிய சிங்கத்தை போன்ற கால்கள் நான்கு. மனித உடல். கிரீடம் தரித்த சிங்க முகம். தந்தங்களை போன்ற கோரைப் பற்கள் என பயங்கர உருவமே சரபேஸ்வரர்.

சூரியன், சந்திரன் மற்றும் அக்னியே சரபரின் மூன்று கண்கள். பிரத்யங்கரா எனும் காளியும், துர்க்கையுமே இறக்கைகள். இந்திரனே நகங்கள். காலனே தொடைகள்.

சரபேஸ்வரர் வழிபாடு சத்ருக்களை அழித் திடும்:

தீரா பிணிகள், குழந்தைப் பேறு, பில்லி சூனிய தொல்லைகள் போன்றவற்றிற்கு நிவர்த்தி. சரப மூல மந்திரத்தினை 108 அல்லது 1008 முறை ஜெபித்து, அபிஷேக ஆராதனைகள் செய்தால் வாதம், சூலை போன்ற கொடிய நோய்கள் தீரும். மலட்டுத் தன்மை நீங்கும்.

சரப காயத்ரி மந்திரம் ஜெபிப்பது பாம்புகளிடமிருந்து காத்திடும். மிக அகோரமாக எல்லா மிருகங்களும் இணைந்த உருவம் திடீரென தன் முன் தோன்றியுடன் நரசிம்மருக்குகோபம் பேய் பயம் வந்தது.

அந்த பயத்தினால் சரபேஸ்வரை தாக்க முற்பட்டபோது, சரபேஸ்வரரின் ஸ்பரிசத்தால் நரசிம்மர் நாராயணானார். இராணியனுடைய குருதியை பருகிய நரசிம்மம் அறிவு திரிந்து உல கம் அனைத்தையும் அழிக்க தொடங்கிய போது இத்தல பெருமான் சரபப் பறவை உருக்கொண்டு அதன் கொடுமையை அடக்கியதால் சரபேஸ் வரர் என்ற பெயருடன் தனி மூர்த்தியாக எழுந் தருளியுள்ளார்.

*சரபேஸ்வரர் பூஜை :*

ஞாயிற்றுக்கிழமை இராகு காலத்தில் (4.30 to 6pm) சரபேஸ்வரர்க்கு சிறப்பு அபிஷேக ஆரா தனை நடைபெறும்.

பிரதி ஞாயிற்றுக்கிழமை பூஜை முடிந்தவுடன் சரபரேஸ்வரர் உள் கர்ப கிரகத்தில் பக்தர்கள் சுற்றி வந்து வழிபடுவார்கள்.

எட்டு வாரம் தொடர்ந்து சரபேஸ்வரர் பூஜை யில் கலந்து கொண்டால் நினைத்த காரியம் நிறைவேறும்.

எம் அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி, திருச்சி.
செல்: 9750333265

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# கட்டாய சந்தா இல்லை!

# சப்ஸ்கிரைப் இல்லை!!

# மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

## ஆன்மிகமலர்.காம் வழங்கும்
## ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் **170** இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# அஹிம்சைக்காக யுத்தம் செய்யலாம்!



வானளவு விரிந்து கிடக்கின்ற மகாசமுத்திரம் தன்னை மட்டும் உருவாக்கி கொள்ளவில்லை தன்னிலிருந்து பலவற்றையும் உற்பத்தி செய் கிறது. கரிய மேகங்கள் சுமந்து செல்லும் சமுத்திர நீர்த்திவலைகள் மழையாக பொழிகிறது. அந்த நீர் அருவியாக குதித்து நதியாக நடந்து மீண்டும் சமுத்திரத்திலையே சங்கமிக்கும் முன்பு ஏரிகள் குளங்கள் குட்டைகள் வாய்க்கால்கள் கண்மாய்கள் என்று பலவற்றை சிருஷ்டி செய்து விடுகிறது. அதனால் தான் இறைவனது படைப் பில் அலைவீசும் மாக்கடல் தலையாய படைப்பாக இருக்கிறது.

சமுத்திரம் நீலமானது, வானமும் நீலமானது எல்லை இல்லாது எவையவை எல்லாம் இருக்கி றதோ அவை அனைத்துமே நீலமானது தான். கடலைப்போல வானத்தை போல இந்து மதமும் எல்லை இல்லாதது. அதனால் தான் இங்கு கடவுளாக காட்டப்படும் கண்ணனும் காளியும் எல்லை இல்லாத பரம்பொருளின் விளக்கமாக நீல நிறத்தில் இருக்கிறார்கள்.

சமுத்திரம் எப்படி சிறிய குட்டைகளுக்கு கூட காரணமாக இருக்கிறதோ அதே போலவே இந்து மதமும் பலவிதமான கருத்துக்களுக்கும் தத்துவங்களுக்கும் வாழ்க்கை முறைகளுக்கும் காரணமாக இருக்கிறது.

ஒரு சிறிய உளி எப்படி பெரிய மலையை பிளந்து விடுமோ அதே போலவே இந்து மதத் திலுள்ள ஒரு சின்னஞ்சிறிய கருத்துக்கும் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் சக்தி உள்ளது. நமது மதத்தில் சொல்லபடாத கருத் துக்களே உலகத்தில் இல்லை. நமது மத பெரியவர்கள் பலமுறை சொல்லி வற்புறுத்திய கருத்துக்களே பிற்காலத்தில் உலக முழுவதும் பரவி பல மதங்கள் உருவாக காரணமாக இருந் திருக்கிறது.

இந்துமத சிந்தனைகள் சைவம், வைஷ்ணவம்,

சாக்தம், காணபத்யம், கௌமாரம், சௌரம் என்ற ஆறு பிரிவிற்குள் மட்டும் அடங்கி விடவில்லை அதையும் தாண்டி மாற்றான் தோட்டத்து மல்லிகையும் தொட்டு தழுவும் தென்றல் போல மாற்று மதங்களையும் உருவாக்கி இருக்கிறது.

இந்தியாவில் தோன்றிய எந்த சிந்தனையும் நான்கு வேதங்களை அடிப்படையாக கொண்டே எழுந்ததாகும். இந்து மதத்தை வளர்க்கும் சிந்தனையாக இருக்கட்டும் அல்லது எதிர்க் கும் சிந்தனையாக இருக்கட்டும் அவை அனைத்திற்குமே வேதங்களே முக்கிய காரணங்களாக தொன்று தொட்டு இருந்து வருகிறது. வேதங்களையும் இந்து மத நம்பிக்கைகளையும் உடைத்தெறிந்து உருவான மதங்கள் என அழைக்கப்படும் ஜைனம், பௌத்தம் போன்ற மதங்கள் கூட வெளிப்படையாக இந்து மத கருத்துக்களை எதிர்ப்பது போல பேசி கொண்டாலும் உள்ளுக்குள் அந்த கருத்துக்களையே மையமாக கொண்டு உருவாகி இருக்கின்றன என்பது விந்தையான உண்மை எனவே அப்படி பட்ட கருத்துக்களையும் ஒரு சிறிதாவது அறிந்து கொண்டால் தான் இந்து மதத்தின் முழுமை யான வடிவத்தை ஓரளவு தரிசனம் செய்ய முடியும்.

உதாரணமாக அஹிம்சை என்ற ஒரு தத்துவத்தை எடுத்துகொள்வோம் இந்த அகிம்சை என்ற வார்த்தையை கேட்டவுடன் நமது கண் எதிரே தோன்றுவது இரண்டு உருவங்கள் ஒன்று வர்த்தமான மகாவீரர் இரண்டு மகாத்மா காந்தி காந்தியின் அகிம்சை நவீன வடிவமான இந்து மதத்தின் பரிணாமம் என்றால் மகாவீரரின் அஹிம்சை இந்து மதத்தின் அறிவு பூர்வமான வடிவமென்று சொல்லலாம் இப்படி நான் சொன்னவுடன் சிலருக்கு வியப்பாக இருக்கும் சிலருக்கு நகைச்சுவையாக கூட இருக்கும். யாகங்களில் உயிர் பலி கொடுப்பதை எதிர்த்து உருவான ஜைன மதம் இந்து மதத்தின் வெளிப்பாடு என்றால் அது எப்படி சாத்தியமாகும் அதை எப்படி நம்ப முடியும். என்று சிலரும் கேட்கலாம். உண்மையை உள்ளவாறு சிந்தித்தால் உண்மை உண்மையாக தெரியவரும்.

பாரத திருநாட்டில் அஹிம்சைஎன்பது வரலாற்று ஆதாரங்கள் எட்டிப்பார்க்க முடியாத தொன்மைக்கால முதற்கொண்டே பெருமளவு மக்களால் போற்றப்படும் ஒரு உன்னத கொள்கையாகும். கொலைத்தொழில் இல்லாமல் அன்பையும் அறனையும் கொண்ட உயிர் தொழிலை உலகுக்கு முதல்முறையாக தந்ததே இந்தியா தான் அதனால் தான் எந்த உயிரையும் ஹிம்சை செய்யாதே என்று வேதங்கள் முழங்குகின்றன. இந்த இடத்தில் ஒன்றை நான் தெளிவு படுத்த விரும்புகிறேன். வேதங்களை அடிப்படையாக கொண்டு நிகழ்த்தப்பட்ட சில யாகங்களில் உயிர்பலி நடந்தது என்னவோ உண்மை தான். அதை நான் மறுக்கவுமில்லை மறைக்க விரும்பவுமில்லை ஆனால் வேதங்களில் உயிர் பலி என்பது விதிவிலக்காக இருந்ததே தவிர செய்தே ஆக வேண்டும் என்ற விதியாக எப்போதுமே இருந்தது இல்லை.

வைதீக தர்மங்களில் உயிர்பலி செய்வது மகா பாவம் என்ற ஞானம் எப்போதுமே போதிக்க படுக்கிறது. உதாரணமாக மிகபெரும் இதிகாசமான மகாபாரதத்தில் ஒரு பகுதியில் யஜ்ஞ நிந்தை எனும் தலைப்பின் கீழ் ஒரு கருத்து சொல்லபடுகிறது. காட்டில் வசிக்கும் வைதீக பிராமணர் பிராணிகளை ஹிம்சை செய்ய மனமில்லாமல் யாகங்களில் தானியங்களை ஆகுதிகலாக போடுகிறார்கள். அப்போது தர்மம் மான் வடிவத்தில் வந்து யாகம் செய்யும் பிராமணனை நோக்கி யாகத்தின் பலனை தரும் தேவர்கள் தானியங்களை ஆகுதிகலாக கொடுத்தால் ஏற்றுகொள்ள மாட்டார்கள் அதனால் என்னை பலியிட்டு யாக பலனை பெற்றுகொள் என்று சொல்கிறது. அந்த பிரமணன் முதலில் சற்று தயங்குகிறான்.

அதன் பிறகு நிதானமாக யோசித்து பார்க்கிறான் யாகம் செய்தவனும் யாகத்தில் பலியிடப்படும் உயிர்களும் மேலான நிலைக்கு போவதாக முன்னோர்கள் சொல்கிறார்கள் எனவே வலியவந்து என்னை பலிகொடு என்று கேட்கும் மானை பலியிட்டால் மானும் நற்கதி அடையும் நானும் யாகத்தில் வெற்றி பெற்றவனாக இருப்பேன் என்று மனதை சமாதானபடுத்தி கொண்டு மான் வடிவத்தில் இருந்த தர்மத்தை யாகத்தில் பலிகொடுத்து தனது வேள்வியை நிறைவு செய்தான். அந்த நிமிடம் முதல் அந்த பிராமணன் அதற்கு முன்பு செய்த




www.aanmeegamalar.com

அனைத்து புண்ணியங்களும் அவனை விட்டு போயின வெறும் பாவங்கள் மட்டுமே அவனை சூழ்ந்து நின்றன. பிராமணன் தடுமாறினான் மனம் பதைபதைத்தான் ஐயோ தவறு செய்து விட்டோமே என்று துடிதுடித்தான்.

அப்போது யாகத்தில் பலியிடப்பட்ட தர்மமான மான் மீண்டும் உயிர்பித்து வந்து தனது சுய வடிவை எடுத்து பிராமணனை நோக்கி பேசியது அஹிம்சை மேன்மையான தர்மம் அஹிம்சை மட்டுமே மேன்மையான தவம் அஹிம்சையே மேன்மையான சத்தியம் அஹிம்சை என்ற ஒன்றிலிருந்து தான் அனைத்து தர்மங்களும் பிறப்பெடுக்கின்றன என்று தர்ம தேவன் பிராமணனுக்கு உபதேசித்ததாக மகாபாரதம் பேசுகிறது. ஆகவே ஐந்தாவது வேதமென்று அனைவராலும் ஏற்றுகொள்ளபட்ட மகாபாரதமே தர்மங்களில் தலைமை அஹிம்சை என்பதை மிக தெளிவாக நமக்கு சொல்லி விட்டது. அஹிம்சை என்பது பலர் நினைப்பது போல பொறுமை அல்ல கலப்படமே இல்லாத தூய அன்பு

இந்து மதத்தின் ஆதார நூலான ஸ்ரீ மத் பகவத் கீதை அஹிம்சையை போதிக்கவில்லை அன்பை வலியுறுத்தவில்லை மாறாக ஹிம்சையை போதிக்கிறது போர் தொழில் செய்வதே தர்மம் என்று பேசுகிறது என்று சிலர் நினைக்கிறார்கள் இது முற்றிலும் தவறு யானையை பார்த்த குருடர்கள் யானை தூன்போன்றது யானை முறம் போன்றது யானை பானையை போன்றது என்று சொல்வது போல் தான் கீதை ஹிம்சையை வலியுறுத்துகிறது என்று சொல்வதாகும். கீதையின் நோக்கம் போர் செய்ய தூண்டுவது அல்ல பிறவிக்கு காரணமாக உள்ள சோகத்தையும் மோகத்தையும் அதாவது துக்கத்தையும் ஆசையையும் போக்க செய்வதே கீதையின் மிக முக்கிய நோக்கம்.

கீதையில் முதல் மற்றும் இரண்டாம் அத்தியாயங்களில் அர்ஜுனன் போர் செய்ய மாட்டேன் என்று சொல்கிறான் அதை மறுத்து பகவான் கிருஷ்ணன் அவனை போர் செய்ய சொல்கிறான். இதை படித்து விட்டு சிலர் கண்ணன் வன்முறையை தூண்டுகிறான் நன்முறையை காட்டவில்லை என்று அரைகுறையாக பேசுகிறார்கள் இது முற்றிலும் தவறு அர்ஜுனன் போர்செய்வது உயிர்களை கொல்லும் வேலை அதை நான் செய்யவே மாட்டேன் என்று சொல்லியிருந்தால் அதை கிருஷ்ணன் மறுத்திருந்தால் அது அதர்மம் ஆனால் அர்ஜுனன் அப்படி எதுவும் சொல்லவில்லை ஐயோ என் எதிரே நிற்பது என் உறவினர்கள் என் நண்பர்கள் என் எதிர்கால வாரிசுகள் அவர்களை நான் கொல்ல மாட்டேன் என்று தான் சொல்கிறான்.

அர்ஜுனனின் இந்த கூற்று அஹிம்சை தர்மத்தால் வந்தது அல்ல நான் என்ற அகங்காரத்தால் வந்தது நான் எனது என்பது எப்போதுமே துன்பத்தின் வடிவாக வந்து முடியும்.

துன்பத்தை போக்குவது தான் பகவானின் வேலை விருப்பும் வெறுப்பும் தவறு செய்வதற்கு காரணமாக இருக்கிறது. அந்த விருப்பு வெறுப்பை அகற்றிவிட்டால் துன்பம் என்பது தவறுகள் என்பது மறைந்து விடும். ஞானத்தின் நெறிமுறைகளை கூறும் இடமெல்லாம் கீதையில் அஹிம்சை நெறியை மேலோங்கி நிற்பதை காணலாம். கீதை கொலை செய் என்று கூறுவது உயிர்களை அல்ல ஆசையை மோகத்தை காமத்தை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

சகல விதத்திலும் சகல நேரத்திலும் சகல உயிர்களிடத்திலும் வெறுப்பில்லாமல் அஹிம்சை பாராட்டப்பட வேண்டும் என்று யோக சூத்திரத்தில் வியாசர் சொல்லுகிறார். ஒருமனிதன் எல்லா நேரத்திலும் அன்பு மயமாக மட்டுமே இருந்தால் அவன் மனதில் எப்போதுமே வஞ்சகம் வராது என்பது வியாசரின் கருத்து ஆதிகால ரிஷிகளின் ஆஸ்ரமங்களில் புலியும் மானும் சகஜமாக வாழ்ந்தன என்று புராணங்களில் படிக்கிறோம் இவை எதை காட்டுகிறது மனித மனதில் கனிந்து கிடக்கும் அன்பு பிரவாகம் மிருகங்களை கூட பற்றிகொள்ளும் என்று நமக்கு தெளிவுபடுத்துகிறது. யோக மார்க்கத்தில் சொல்லப்படும் இயமம், நியமம் என்ற படித்தரங்கள் அஹிம்சா தர்மத்தை ஆதாரமாக கொண்டதாகும்.

தர்மங்களையும் தத்துவங்



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

www.aanmeegamalar.com

களையும் வாழ்க்கையின் நடைமுறையோடு உருவகபடுத்தி சொல்லும் இந்துமத புராணங்கள் கூட அஹிம்சையின் புகழை பலவாறு நமக்கு எடுத்து காட்டுகிறது. உதாரணமாக பத்ம புராணத்தில் ஈஸ்வரனுக்கு மிக பிரியமான எட்டுவித மலர்கள் சொல்லபடுகின்றன அந்த மலர்கள் என்ன தெரியுமா? அஹிம்சை புலன டக்கம் தயை பொறுமை சாந்தி தவம் தியானம் சத்தியம் இந்த எட்டு வித மலர்களே ஈஸ்வரனை திருமார்பை அலங்கரிக்கும் மலர்மாலைகள் என்றால் இந்து மதத்தின் ஆதார சுருதியே அஹிம்சை என்பது புலப்படுகிறது அல்லவா?

அஹிம்சை என்றால் துன்பம் விளைவிக்காமல் இருப்பது மட்டுமல்ல எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டுவதும் ஆகும். அன்பே சிவம் ஆனந்தமே ஆத்மா அஹம் பிரம்மாஸ்மி ஏகம்ஸத் என்ற தத்துவங்கள் எல்லாம் அஹிம்சை என்ற ஊற்றிலிருந்து புறப்பட்ட நீரோடைகளே ஆகும்.

உலகத்தில் காணபடுகின்ற உயிர்கள் அனைத்தும் ஒரே ஆத்மாவின் பல்வேறு வடிவங்கள் என்ற ஞானம் நமக்கு பிறக்குமேயானால் அன்பு என்பது தானாக தோன்றிவிடும். எனக்கு துன்பம் தருவது மற்றவனுக்கும் துன்பத்தையை தரும் என்ற தெளிவு வந்துவிட்டால் வன்முறை என்பதே உலகத்தில் இல்லாமல் போய்விடும். இது அஹிம்சையின் துவக்க தத்துவம் அதன் சிகரம் எது தெரியுமா? பிறர் என்னை ஹிம்சித்தாலும் நான் அவரை ஹிம்சிக்க மாட்டேன் என்பதே அஹிம்சையின் சிகரம் இதை இந்து மதம் ஒன்றில் மட்டும் முதல்முறையாக காணபடுகிறது. அவற்றிலிருந்தே மற்ற மதங்களும் மகான்களும் கடனாக பெற்றார்கள் என்று துணிந்து சொல்லலாம்.

இப்போது ஒரு கேள்வி வரும் அஹிம்சை ஒன்று தான் உயர்ந்தது சிறந்தது என்று இந்து மதம் கருதினால் அதன் தர்ம நூல்கள் யுத்த தர்மத்தை பற்றி விரிவாக பேசுவது ஏன்? இந்து மன்னர்கள் யுத்தங்கள் செய்தது ஏன்? மன்னர்கள் கூட கிடக்கட்டும் இதிகாசபுருஷர்கள் இறைவனின் அவதாரங்கள் என்று அழைக்கப்படும் மகாபுருஷர்கள் யுத்த தொழிலை செய்தது ஏன் என்ற சந்தேகம் யாருக்கும் வராமல் போகாது அவர்கள் ஒன்றை மிக தீவிரமாக உணர்ந்து கொள்ள வேண்டும் இந்து மதம் முத்திக்கு மட்டுமே வழிகாட்டும் ஒருவழி



பாதையல்ல அது சாதாரண மனிதர்களுக்கும் வாழ்க்கையை கற்றுகொடுக்கும் ராஜபாட்டை. தவ ஸ்ரேஷ்டர்களும் ஞானிகளும் முனிவர்களும் அஹிம்சையை மட்டுமே கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்திய நமது மதம் நம்மை போன்ற சாமான்யர்களை பார்த்து வேறு விதமாக சொல்கிறது.

உலக சமூகத்தை மீட்டெடுத்து முன்னோக்கி அழைத்து செல்வதற்கு சில தர்ம யுத்தங்கள் அவசியமாக தேவைபடுகிறது. அதை நிகழ்த்தாமல் போனால் வளர்ச்சி என்பது கானல் நீராகிவிடும் என்று மாகாபாரதத்தில் வனபர்வத்தில் சொல்லபடுகிறது. அஹிம்சையை நோக்கி செல்வது தான் மனிதனின் தலையாய கடமை இயன்றவரையில் மனதின் அதை தொடர்ந்து செய்ய வேண்டும். தனிப்பட்ட வாழ்க்கையும் சமூக வாழ்விலும் அஹிம்சா தர்மத்தை கடைபிடித்தால் இறைவனின் திரு பாத நிழலை நிரந்தரமாக அடையலாம் இதுவே இந்துமதம் சொல்லும் அஹிம்சை வழி அந்த வழியில் வர்த்தமான மகாவீரர் எந்த வகை பயணத்தை மேற்கொண்டார் என்பதை அடுத்த பதிவுகளில் சிந்திப்போம்..

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

# ஆன்மீக வழியில் அமைதி




69

பிரம்மத்துடன் மாயை சேர்ந்து தோன்றியதுதான் நாம் காணும் இந்த உலகம். இந்த மாயை தத்துவம் சத்துவ, ரஜோ, தமோ என மூன்று குணங்களையுடையது. இந்த மாயை பிரம்மத்தைச் சார்ந்துதான் உள்ளது. எனவே மாயை தத்துவம் சத்வ, ரஜோ, தமோ என்ற மூன்று குணங்களுடன் இருக்கின்றன. பிரம்ம தத்துவத்துடன் மாயை சேர்ந்து சிருஷ்டி தோன்றியது. அதாவது மாயையிலிருந்து நாம் காணும் இந்த உலகம் தோன்றியது. மாயையின் பரிமாணமாக இந்த உலகம் தோன்றியுள்ளது. பிரம்மத்தைச் சார்ந்துதான் இந்த மாயை தத்துவம் செயல்படுகிறது. மாயையும் பிரம்மமும் சேர்ந்ததுதான் ஈஸ்வர தத்துவம் ஆகும்.

பிரம்ம தத்துவத்துடன் மாயை சேர்ந்து மாயையிடமிருந்து பஞ்சபூதங்களில் ஒன்றான முதலில் ஆகாசம் என்ற பூத தத்துவம் தோன்றியது. அதாவது மாயையின் மாறுபாடான நிலம், நீர், நெருப்பு, வாயு என்ற பஞ்சபூதங்கள் ஒன்றன் பின் ஒன்றாக தோன்றியது என்று சாஸ்திரம் கூறுகிறது. மாயையிடம் சத்வ, ரஜோ, தமோ என முக்குணங்கள் இருப்பதால் சூக்மமான பஞ்ச பூதங்களிலும் மூன்று குணங்கள் இருக்கின்றன. பஞ்ச பூதங்களின் சக்தி இந்த பூமியில் இருப்பதால்தான் உலகம் இயங்கிக் கொண்டு இருக்கிறது. நியதியுடன் இயங்கவும் முடிகிறது. பஞ்சபூதங்களில் ஒன்றான நீர் என்ற பூத தத்துவம் இல்லாததால் பாலைவனத்தில் உயிரினங்கள் வாழ முடிவதில்லை.

அதேபோல் கடல் நீரில் வாழும் உயிரினங்களைத் தவிர மற்ற

உயிரினங்கள் இருப்பதில்லை. பஞ்சபூதங்களில் ஒன்றான நீர் மட்டும் இருப்பதால்தான் அதற்கு முக்கிய காரணம். மனிதர்கள் வாழும் இந்த உலகத்தில் நீர், நிலம், நெருப்பு, வாயு , ஆகாயம் என பஞ்சபூதங்களின் சக்தி எல்லாம் நிறைந்து இருப்பதால் மனிதன் உட்பட அனைத்து உயிரினங்கள் பூமியில் வாழுகின்றன. இதிலிருந்து நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். பஞ் சபூதங்கள் சக்தி எல்லாம் எங்கும் நிறைந்து இருப்பதால்தான் இந்த உலகம் இயங்குகிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த உலகத்தைப் படைத்த ஈஸ்வரனுக்கும் ஜீவனுக்கும் உறவு இருக்கிறது. அதாவது ஜீவனாகிய நமக்கும் இந்த உலகத்தைப் படைத்த ஈஸ்வரனுக்கும் உறவு இருக்கிறது. இந்த உறவில் பலவிதமான மாறுபட்டக் கருத்துக்கள் உள்ளன. ஈஸ்வரன், ஜீவனுக்கும் இரண்டு உறவுகள் உள்ளன. அவை மேலோட்டமான உறவு, மற்றொன்று அடிப்படையான உறவு என இரண்டு உறவுகள். ஒரு கோணத்தில் சிந்தித்துப் பார்த்தால் ஜீவனும் ஈஸ்வரனும் இரண்டு என்று கூறலாம். மற்றொரு கோணத்தில் ஜீவனும் ஈஸ்வரனும் ஒன்று என்று வேதம் கூறுகிறது.



www.aanmeegamalar.com

எடுத்துக்காட்டாக தந்தை மகன் என்ற உறவுகளைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். தந்தை என்பவர் ஆசிரியர் பணி புரிவதாக வைத்துக் கொள்வோம். அவர் வீட்டில் மகனிடம் அப்பா என்ற உறவுடன் சிரித்துப் பேசி சுதந்திரமாக செயல்படுகிறார். தந்தை ஆசிரியராகப் பணிபுரியும் பள்ளியில் படிக்கும் மகனுக்கு அதே தந்தை என்பவர் ஆசிரியர் மாணவன் என்ற உறவுடன் கண்டிப்புடன் செயல்படுகிறார். அவர் வீட்டில் மகனிடம் கொஞ்சிப் பேசுவதுபோல் பள்ளியில் வைத்து பேசுவதற்கு அவரால் முடிவதில்லை. காரணம் அங்கு அவர் ஆசிரியராக மகனிடம் செயல்படுகிறார். அதாவது அவர் வீட்டில் இருக்கும்போது பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும் மகனுக்கு அப்பாவாக இருக்கிறார். அவர் பள்ளியில் ஆசிரியராக பணிபுரியும்போது அவர் மகன் அவருக்கு மாணவனாக இருக்கிறான். அதாவது தந்தை பள்ளியில் ஆசிரியர் ஸ்ரீ மாணவன் என்ற உறவு, வீட்டில் அவர் தந்தை மகன் என்ற உறவு.

அதுபோல ஜீவனுக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு ஆகும். அதாவது ஒரு கோணத்தில் சிந்தித்துப் பார்த்தால் ஈஸ்வரன், ஜீவன் இரண்டு. மற்றொரு கோணத்தில் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் ஈஸ்வரன் ஜீவன் ஒன்று என்று வேதம் கூறுகிறது. ஈஸ்வரன் என்பவர் ஜீவனாகிய நம்மையும் உலகத்தையும் படைத்தவர். ஜீவன்கள் ஈஸ்வரனால் படைக்கப்பட்டவர்கள். எனவே படைத்தவர் படைக்கப்பட்டவர் என்ற உறவுகள் ஆகும். இந்த உறவை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம். இதில் மாறுபட்டக் கருத்துக்கள் இல்லை. இதனை ஏற்றுக்கொண்டதினால்தான் நாம் ஈஸ்வரனை வழிபட்டுக்கொண்டு இருக்கிறோம். ஏன் என்றால் ஜீவனாகிய நம்மையெல்லாம் படைத்தவர் ஈஸ்வரன்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

ஜீவனாகிய நாம் கர்மம் புரிபவர்கள். அந்த கர்மங்களுக்குத் தகுந்த பலன்களைக் கொடுப்பவர் ஈஸ்வரன். அதாவது நாம் என்ன கர்மங்கள் செய்கிறமோ அதற்குத் தக்க பலன்களைக் கொடுப்பவர் ஈஸ்வரன். நாம் கோதானம், வஸ்திர தானம், அன்னதானம் போன்ற தானதர்மங்களை

செய்கிறோம். அதற்குத்தக்க புண்ணிய பலன்களை பெறுகிறோம். அந்த புண்ணிய பலன்களைக் கொடுப்பவர்தான் நம்மைப் படைத்த ஈஸ்வரன் என்று சாஸ்திரம் கூறுகிறது. நாம் நம்மை அறியாமல் தவறு செய்து விட்டால் ஈஸ்வரனிடம் பிரார்த்தனை செய்கிறோம். இந்த பிரார்த்தனைகூட ஒரு கர்மாதான் என்று சாஸ்திரம் கூறுகிறது.



ஜீவன்களாகிய நாம் நன்மை தரக்கூடிய கர்மாக்கள் செய்யும்போது அதற்குரிய புண்ணிய பலன்களை ஈஸ்வரன் கொடுத்துக்கொண்டு இருக்கிறார். நாம் தீமை தரக்கூடிய கர்மாக்களை மேற்கொள்ளும்போது அதற்குரிய பாவப்பலன்களை ஈஸ்வரன் கொடுத்துக்கொண்டு இருக்கிறார். இதனை உலக வழக்கில் 'வினை விதைத்தவன் வினை அறுப்பான், திணை விதைத்தவன் திணை அறுப்பான்' என்று கூறக் கேட்டு இருக்கிறோம். கர்மங்களுக்கு தக்க பலன்களை கொடுப்பவர் ஈஸ்வரன். கர்மங்களுக்குரிய பலன்களை ஈஸ்வரனால் கொடுக்கப்பட்டு அனுபவவிப்பவர்கள் ஜீவன்கள். எடுத்துக்காட்டாக பொற்கொல்லர் தங்கத்தை தட்டித்தட்டி அழகிய ஆபரணத்தை உருவாக்குகிறார். அதேபோல் ஈஸ்வரன் ஜீவன்களாகிய நாம் அறிந்தும் அறியாமல் செய்யகூடிய பாவச்செயல்களுக்குத் தக்க துன்பங்களைக் கொடுத்து நம்மை ஜீவன் முக்தர்களாக மாற்றுகிறார். இதனை நாம் உணர்ந்து கொண்டால், துன்பங்களை ஏற்று கவலைப்படுவதை விட்டு விடுவோம். அதனால் நாம் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும்.

நமது இந்த ஸ்தூல சரீரம் ஈஸ்வரனின் ஒரு சிறிய அம்சம் ஆகும். ஈஸ்வரனுக்கும் ஜீவனுக்கும் உள்ள உறவு ஈஸ்வரன் படைப்பவர், ஜீவன்களாகிய நாம் ஈஸ்வரனால் படைக்கப்பட்டவர்கள். ஈஸ்வரன் என்பவர் அறிவு ஸ்ரூபமான நித்தியமாக இருக்கும் முத்தர். நாம் அறிவுடையோராக இருந்தாலும் பந்தபாசத்தில் சிக்குண்டு இருப்பதால் அவருடைய பக்தர்கள் ஆவோம். ஈஸ்வரன் இந்த உலகத்தைப் படைத்தாலும் அதில் பந்தப்படாதவர். ஜீவன்களாகிய நாம் இந்த உலகில் பிறந்து நாம் நம் அறிவின் துணைகொண்டு வீடு, மனைவி மக்கள் என்பதை நம்மையும் அறியாமல் உருவாக்கிக் கொண்டோம். அதிலிருந்து விடுபடுவதற்கு முடியாமல் பந்தபாசங்களில் சிக்கிக்கொண்டு அல்லல்படுகிறோம். அதாவது நாளடைவில் பந்த பாசங்களுக்கு அடிமையாகி விடுகிறோம்.

ஈஸ்வரனுக்கும் ஜீவனுக்கும் அடிப்படையான வேறுபாடுகள் இருக்கின்றன. ஈஸ்வரன் அறிவு ஸ்ரூபமாக இருந்து உலகத்தைப் படைத்தவர். ஆனால் அதில் அவர் பந்தப்படாதவர். ஜீவன்களாகிய நாம் நம்மால் உருவாக்கப்பட்டவைகளுக்கு நாம் அறிந்தும் அறியாமல் அதில் பந்தப்பட்டு விடுகிறோம். அதாவது என் வீடு, என் நிலம், என் மனைவி, என் மக்கள் என்று பந்தபாசங்களுக்கு நடுவே வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். மனிதர்கள் பந்தபாசங்களில் ஈடுபடும்போது தாமரையிலைத் தண்ணீர் போல் செயல்படும்போது நாம் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும்.

ஈஸ்வரன் இந்த உலகத்தில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் ஒரு நியதிக்குள் கட்டுப்பட்டு படைத்துள்ளார். அந்த நியதிகளுக்கு மாறாக பந்தபாசங்களை உருவாக்கி அதற்கு நாம் அடிமையாக இருக்கிறோம். அதாவது ஈஸ்வரன் என்பவர் பந்தப்படாதவர். ஜீவன்களாகிய நாம் பந்தப்பட்டவர்கள். ஈஸ்வரன் பலன்களைக் கொடுப்பவர். ஜீவன்களாகிய நாம் கர்ம பலன்களை பெறுபவர். அதாவது மனிதன் கர்மங்களுக்கு ஏற்றவாறு கர்ம பலன்களை பெற்று அனுபவவித்துக் கொண்டிருப்பவர்கள். ஈஸ்வரன் நியதிகளுக்கு மாறுபட்டு கர்மங்கள் நாம் செய்யும்போது நாம் அமைதியை இழந்து துன்பப்படுகிறோம். இறைவனிடம் பிரார்த்தனை செய்வதுகூட ஒரு கர்மாதான் என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஈஸ்வரன் முன்பாக நமது பிரார்த்தனைகள் நன்மை தரக்கூடிய செயல்களாக இருந்தால், அதற்குரிய புண்ணிய பலன்கள் நமக்கு கிடைக்கும்.

www.aanmeegamalar.com

அவைகள் தீமை தரக்கூடிய செயல்களாக இருக்கும்பட்சத்தில் அதற்குரிய பாவத்தின் பலன்களை அனுபவவிப்பதற்கு நேரிடும். எடுத்துக்காட்டாக ஒரு திருடன் கோவிலில் சென்று கடவுளிடம் 'நான் இன்று திருடப் போகிறேன். எனக்கு பொன்னும் பொருளும் நிறையக் கிடைக்க வேண்டும்' என்று பிரார்த்தனை செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். ஈஸ்வரன் அவனுடைய பிரார்த்தனைக்கு செவி சாய்த்து நிறைவேற்றவும் செய்வார். திருடன் அதற்குரிய கர்ம பலன்களை அவனையும் அறியாமல் பெற்று அவனைத் துன்பப்படவும் செய்து விடுவார். எனவே நமது ஜென்மப் பகைவனாக இருந்தாலும் நாம் பகைவனுக்கு நல்ல புத்தியைக் கொடுத்து அவனை காப்பாற்றும்படி கடவுளிடம் மனம் உருகி வேண்டி பிரார்த்தனை செய்ய வேண்டும். அதற்கு மாறாக பகைவன் தன் கண்முன்னாலே கஷ்டப்பட்டு அவனுடைய வாழ்வு முடிய வேண்டும் என்று வேண்டினால் அதற்குரிய பலன்களை நாம் அனுபவிக்க வேண்டும் என்பதை உணர வேண்டும். பகைவனுக்கும் அருள்வாய் என்று நாம் பகைவனுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிப்பட்ட வேண்டுதல் பிரார்த்தனை என்ற கர்மா உன்னையும் அறியாமல் உனக்கு மன அமைதியைக் கொடுக்கும். அதனை உன்னால் உணர்ந்துகொள்ளவும் முடியும்.

ஹைட்ரஜன் ஆக்சிஜன் என்ற மூலகூறுகள் நீரில் உள்ளன. அதனை நாம் நீரினைப் பிரித்துப் பார்க்கும்போது அதில் ஹைட்ரஜன் ஆக்சிஜன் என்ற மூலகூறுகள் உள்ளன என்பதை ஆராய்ச்சியாளர்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். அதேபோல் ஈஸ்வர தத்துவம் ஜீவ தத்துவம் இரண்டையும் பிரித்துப் பார்க்கும்போது ஜீவன் என்ற சொல்லுக்குள் ஸ்தூல சரீரம், சூக்ம சரீரம் காரண சரீரம் இருக்கிறது. ஜீவனுக்குள் ஆத்மா, அனாத்மா இருக்கிறது. ஆத்மா அறிவு ஸ்ரூபமாகவும் காரண சரீரமாகவும் உள்ளது என சாஸ்திரம் கூறுகிறது.

ஆத்மா நமக்குள் அறிவு ஸ்ரூபமாக இருந்து பிரதிபலிக்கிறது. அதாவது ஆத்மா அனைத்து உயிர்களிடத்தில் இருந்தாலும் சூக்ம சரீரத்தில் இருந்து ஆத்மா அறிவு ஸ்ரூபமாக பிரதிபலிக்கிறது. எடுத்துக்காட்டாக சூரியன் எல்லா இடத்தில் ஒளியைப் வெளிபடுத்தினாலும் அது வானத்தில் இருந்துதான் தன்னை அனைத்து இடங்களிலும் தன்னை வெளிப்படுத்துகிறது. அதேபோல் ஆத்மா அனைத்து ஜீவன்களுக்குள் இருந்தாலும் சூக்ம சரீரமூலம் அறிவு ஸ்ரூபமாக தன்னை வெளிபடுத்துகிறது.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்


# மனம் தானாக அமைதி யடையாது என்பதால் கடவுளும் மதமும் தேவைப்படுகிறது

சீடன்: சுகம் அடைய கஷ்டப்பட வேண்டுமா?

ஞானி: சுகத்தை அனுபவிக்கும் மனிதன் கஷ்டப்படுகிறான்; ஆனால் அது மறைக்கப்படுவதால் தெரிவதில்லை.

சீடன்: இது ஏன் அனைவருக்கும் தெரிவதில்லை?

ஞானி: பேரறிவு கொண்ட மனிதர்களாக இருந்தாலும் சிற்றறிவு கொண்ட மனிதர்களாக வாழ்வதால்.

சீடன்: இறைவன் ஏன் அவ்வளவு முக்கியமானவன் ஆனான்?

ஞானி: ஆத்மாவின் தலைவனான இறைவன் ஆத்மாவுக்கு துணையாக உள்ள உற்ற நண்பன், அதனால் ஆத்மாவிற்கு மாத்திரம் ஆரோக்கியத்தைத் தருபவனல்ல கடவுள். உடல், பொருள், ஆவி அனைத்துக்கும் காப்பு அவனே.

சீடன்: மனிதன் அவ்வளவு முக்கியமாக முடியாதா?

ஞானி: மலமில்லாத மனிதன் இருந்தால் அவனே கடவுளாவான்.

சீடன்: பின் ஏன் மனிதன் பயப்படுகிறான்?

ஞானி: மனிதனுடைய பலம் உலகத்திலுள்ள எந்த பொருட்களிலும் இல்லை, கடவுளை மறுத்ததினால் தான் சூழ்நிலை பயம் அவனுக்கு ஏற்படுகிறது,

சீடன்: சூழ்நிலை பயத்தினால் தான் கடவுளை நினைக்க முடியவில்லை?

ஞானி: சூழ்நிலை பயத்தினால் பாதிக்கப்பட்ட நீ உப்பு, புளி, மனைவி, குடும்பத்தை மறக்கவில்லையே. கடவுளை மாத்திரம் ஏன் மறந்தாய்?

சீடன்: மறக்கவில்லையே, பூஜைகள் செய்துகொண்டு இருக்கிறோமே?

ஞானி: பக்தர்களின் உள்ளம் தான் ஆண்டவனுக்கு, நினைக்காத உன் பூஜை, அபிஷேகம், கோயில் எல்லாம் செயற்கை.

சீடன்: எதைப் பார்த்தாலும் சந்தேகம் வருகிறதே?

ஞானி: எந்த மார்க்கத்திற்குப் போவதற்குமுன்னாலும் மனிதனுக்கு வருவது சந்தேகமே. அதை தீர்த்து வைப்பதே அறிவு.

சீடன்: விருப்பம் எப்பொழுது வரும்?

ஞானி: கடவுள் வேண்டும் என்ற அபிப்பிராயம் வந்தால்.

சீடன்: விருப்பம் எப்பொழுது வராது?

ஞானி: பக்தி தேவை இல்லை என்று எண்ணும் போது.

சீடன்: கருத்துக்களை எப்படி வாங்கிக்கொள்ள வேண்டும்?

ஞானி: எந்தக் கருத்தையும் உடனே தலையில் வைக்காதே. காதால் நன்றாகக் கேட்டுக் கொள். புரிந்து கொள்ளாமல் தலையில் போட்டால் வெறி பிடிக்கும். தெரு நாயாக இருந்தாலும் விட்டு நாயாக இருந்தாலும் கடித்தால் ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.

சீடன்: கடவுளும் மதமும் எதற்கு?



ஞானி: கையில் அரிசியை வைத்து சமைத்துப் போட முடியாது என்பதால் பானை தேவைப்பட்டது. மனம் தானாக அமைதி யடையாது என்பதால் கடவுளும் மதமும் தேவைப்படுகிறது. உலக விஷயங்களால் கெடக் கூடாது என்பதால் கடவுளை உள்ளே நுழைத்தார்கள்.

சீடன்: உருமுள்ள கடவுள்தேவையா?



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல் செல்

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

ஞானி: அது உன் மன நிலையைப் பொறுத்தது. உலகம் விரி வடை வதற்குத் தக்கபடி கடவுள் தன் உருவத்தை மாற்றிக் கொள்கிறான்.

சீடன்: ஞானம் நம்பிக்கையினால் வருமா?

ஞானி: தாராளமாக. நம்பிக்கை உயிருக்கு பயன் தரும் என்று எண்ணும்பொழுது.

சீடன்: குருநாதர்களிடமிருந்து இந்த ஞானம் வரமுடியுமா?

ஞானி: பணக்காரனிடம் இருந்து பணம் வரும் என்ற நம்பிக்கையே மனிதனுக்கு வரும்போது கருணையே உருவான ஞானிகளிடமிருந்தும், பக்தர்களிடமிருந்தும் ஞானமும் பக்தியும் ஏன் வராது?

சீடன்: உலக நெருக்கடியை தீர்க்க ஞானிகளின் அறிவுரை என்ன?

ஞானி: உலக மக்கள் அனைவரும் கடவுளிடம் அன்பு செலுத்தி பக்தி செய்தால் நெருக்கடி தீரும். பக்தியின்மையே நெருக்கடிக்கு காரணம்.

சீடன்: கடவுள் பெயரைச் சொன்னால் மட்டும் போதுமா?

ஞானி: முருகா, இராமா என்ற பெயர்கள் சிறிய விளக்காகத் தோன்றலாம். நம்பிக்கையுடன் உணர்ந்தால் அதுவே கோடி சூரிய ஒளி.

சீடன்: தெய்வீகம், லௌகீம் என்ன வித்தியாசம்?

ஞானி: சிந்தனை, மனம், புத்தி, சித்தத்துடன் கலந்துசெயல்படும்போது தெய்வீகம். இந்திரியங்களுடன் மூளை கலந்து செயல்படும்போது லௌகீகம்.

சீடன்: பக்தன் என்பவன் யார்?

ஞானி: உலகின் உண்மையான அறிவைப் பெறுகிறவன்.

சீடன்: இதற்கு குரு தேவையா?

ஞானி: ஆண்டவனிடம் மனதை வைக்கும் பயிற்சியை எங்கு பெறுகிறான் என்பதே முக்கியம். அந்த இடமே குருகுலம்.

சீடன்: குருநாதன் என்பது யார்?

ஞானி: எல்லாவற்றிற்க்கும் முடிவு இருக்கிறது, தெளிவு இருக்கிறது என்று சொல்பவனே குரு.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
அழகுராஜா எஸ்.மகாதேவன், போன் 098410 28028






# செறுத்துணை நாயனார் அவதாரஸ்தலம்




"தஞ்சை மன்னவனாம் செருத்துணை தன்
அடியார்க்கும் அடியேன்"

எனச் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் தனது திருத்தொண்டர் தொகையில் செருத்துணை நாயனாரை புகழ்ந்துப் பாடுகின்றார்.

சைவத்தின் அளவில்லா பெருமைகளுல் அறுபத்துமூவர் தனி இடம் வகிப்பர். அரனாருக்கும், அவரது அடியாருக்கும் இவர்கள் செய்த தொண்டுகளை வரிகள் சிலவற்றில் எழுதி விடவோ, வார்த்தைகள் சிலவற்றில் சொல்லி விடவோ முடியாது.

அப்படி அறுபத்துமூவரில் ஒருவராக போற்றப்படுகின்றார் செருத்துணை நாயனார்.

சோழதேசத்தில் இரண்டு "தஞ்சை" இருந்தது. ஒன்று சோழவள நாட்டின் தலைநகரும், மற்றொன்று திருமருகலைச் சேர்ந்த மருகல் நாட்டு தஞ்சையும் ஆகும். இந்த மருகல் நாட்டுத் தஞ்சை, கீழத்தஞ்சாவூர் என்று அழைக்கப்படுகிறது. இப்பதியில் பிறந்தவரே செருத்துணை நாயனார். செறுத்துணை என்பதற்கு (செரு = போர்) போருக்குத் துணையாக வருபவர் என்பது பொருளாகும்.




இவர் சைவ வேளாளர்க் குடியில் பிறந்தவர்.

இவர் திருவாரூரில் ஸ்ரீ வன்மீகநாதர் ஆலயத்தில் தொண்டுகளைப் புரிந்து வந்தார்.

ஒருநாள் பல்லவ மன்னனான கோச்சிங்கர் தனது பட்டத்து இராணியான பெருந்தேவியுடன் திருவாரூர் தியாகேசரை வழிபட வந்தார். இவரும் ஈசன் மீது அலாதி அன்பு கொண்டவர்.


அப்போது திருவாரூர் பெருங்கோயில் நந்த வனத்தின் அழகை ரசித்துக் கொண்டிருந்த அரசியார் பெருந்தேவி, இறைவனுக்கு சாற்று வதற்க்கென்று பறிக்கப்பட்டிருந்த ஒரு பூவை எடுத்து முகர்ந்து விட்டாள். இதைப் பார்த்து செருத்துணையார் பதைபதைத்தார். அரசியின் கூந்தலை பிடித்து இழுத்து, அவளை கீழே தள்ளினார். தனது குறுவாளால் பூவை முகர்ந்த மூக்கினை அறுத்தார்.



மோ.கணேஷ்

நடப்பதை உணராமல் தடுமாறியப் பெருந் தேவி, துடிதுடித்துப் போனாள். மூக்கில் இருந்து இரத்தம் வழிந்தது. வலியால் 'ஓ' வென அலறினாள். அழுதுப் புரண்டாள்.

அவளது அலறல் சத்தம் கேட்டு அங்கு ஓடி வந்தார் பல்லவர்க்கோன் கழற்சிங்கர். நடந்ததை அறிந்தார். செருத்துணையார் தவறிழைத்து விட்டார்... என்று சொல்லிக் கொண்டே தனது கைவாளால் அரசியாரின் வலது கரத்தை வெட்டினார்.



சிவனுக்குரிய பூவை எடுத்தது முதலில் கையல்லவா?? அதனால் கரத்தை வெட்டியதாய் காரணம் கூறினார்.

சிவனுக்கு செய்யும் அபராதத்திற்கு பிரதி அபராதமாக இந்த தண்டனையை வழங்கிய பெருமிதத்தோடு நின்றனர் இரு நாயன் மார்களும்...

உடன் அங்கே உமாதேவியரோடு ரிஷபத்தின் மீது ஈசன் எழுந்தருளி, அவ்விரு நாயன்மார்களை ஆட் கொண்டதோடு, அரசியாரையும் பழைய நிலைக்கு மாற்றினார்.

இவ்வாறு பரமேஸ்வரர் புரியும் லீலைகளுக்கு அளவே கிடையாது.

செருத்துணை நாயனார்பிறந்த தலமான இந்த கீழத்தஞ்சாவூரில் அகிலாண்டேஸ்வரி உடன் எழுந்



தருள் புரிகின்றார் திருமூலநாதர்.

சிறியதொரு ஆலயம். இராஜகோபுரம் கிடையாது. மேற்றளி எனப்படும் மேற்கு பார்த்த ஆலயம்.

தென் வாயிலுக்குள் நுழைந்திட... நேராக தென்முகம் பார்த்த சன்னிதிக்குள் அம்பிகையாக ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அழகுமிளிற அருளுகின்றாள். பளபள பச்சைக் கல்லால் ஆன திருமேனி. ருத்ராக்ஷ மாலை ஏந்தி, தவக்கோல நாயகியாக தரிசனம் தருகின்றாள்.

ஈசன் சன்னிதி மேற்கு நோக்கியபடி கற்றளியாக, அதாவது கல் கட்டிடமாகத் திகழ்கிறது. நந்தி மண்டபம் கடந்து, சில படிகள் ஏறி செல்கிறோம். அர்த்த மண்டபம், கருவறை அமைப்பிலான சன்னிதியுள் வட்டவடிவ ஆவுடையாருடன் வரமருள்கின்றார் ஸ்ரீ மூலநாதர்.

கோஷ்ட தெய்வங்கள் முறையே ஆலயத்தை அலங்கரிக்கின்றன.

செருத்துணை நாயனாரின் சன்னிதி வடக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது.

சிவன் பார்வதியின் சன்னிதிகள் கருங் கல் திருப்பணிகளாக உள்ளன. இவ்விருசன்னிதிகளும் முதலாம் பராந்தகச் சோழனால் எழுப்பப்பட்டதாகும்.

பராந்தகச் சோழனது கல்வெட்டுகளும் இங்கு நிரம்பிக் கிடக்கின்றன.

தல விருக்ஷமாக வில்வம் திகழ்கிறது. தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகின்றது.

செறுத்துணை நாயனாரின் குரு பூஜையானது, அவரது திருநட்சத்திரமான ஆனி மூலத்தில் சிறப்புற நடக்கின்றது. அன்று அதிக அளவில் பக்தர்கள் இங்கு வருகை தந்து, சிவசக்தியின் திருவருளோடு செருத்துணை நாயனாரது திருவருளையும் பெற்றுச் செல்கின்றனர்.

ஸ்ரீ இராமபிரானால் பிரதிஷ்டை செய்யப்பட்ட 32 மற்றும் 64 பட்டைகளுடைய தாரா லிங்கங்கள் இவ்வூரில் உள்ளன. செருத்துணை நாயனார் திருத்தாள் போற்றி.போற்றி.

திருவாரூர் மயிலாடுதுறை பேருந்து சாலையில் உள்ள கங்களாஞ்சேரியில் இருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் நாகூர் செல்லும் வழியில் உள்ளது கீழத்தஞ்சாவூர்.

– பழங்காமூர் மோ.கணேஷ்.

தொடர்பு எண்: 9789156179



# பக்தர்களின் இல்லந் தேடி 24 நாட்கள் பயணம் செய்யும்



# திருகூடல் மலை நவந்த பெருமாள்

முருகனின் முதல்படை வீடான திருப்பரங்குன்றம் கோவில் மிக அருகே உள்ளது. திருகூடல் மலை. இம்மலையில் அடிவாரத்தில் உள்ள ராமலிங்க விலாசத்தில் கட்டிக்குளம் மகாசித்தர் சூட்டுகோல்ஸ்ரீ மாயாண்டி சுவாமி.

மலை நடுவே ஸ்ரீசோமப்பா சுவாமி.

மலை உச்சியில் சித்தர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட தண்டபாணி சுவாமி.


அதன் அருகில் குகைகோவிலில் ஸ்ரீநவநீத பெருமாள் ஸ்ரீவைகுண்டபெருமாள் சன்னதிகள் உள்ளது.

மற்றும் மலை பாதையில் மிக பெரிய ஆஞ்சநேயர் கோவில் உள்ளது.

திருகூடல்மலையில் இருந்து சித்தர்கள் ஒரே நேரத்தில் அன்னை மீனாட்சி அம்மன், யானை மலை யோகநரசிம்மர், அழகர் மலை அழகர் ஆகியோரை ஒரே நேரத்தில் தியான நிலையில் தரிசித்து உள்ளனர்.

என பக்தர்கள் கூறிவருகின்றனர். இப்போதும் இம்மலை உச்சியில் இருந்து மீனாட்சி அம்மன் கோவில் கோபுரங்கள் மற்றும் யானைமலை, அழகர் மலையை காணலாம்.

இக்கோவிலில் சித்தர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீநவநீதபெருமாள் ஆண்டு தோறும்ஆடி.







பவுர்ணமி தினத்தில் திருகூடல்மலை யில் இருந்து புறப்பட்டுமதுரை ஆரப்பாளையம், கோரிப் பாளையம், கே. கே.நகர், வண்டியூர், சிவ கங்கை மாவட்டம் திருப்புவனம், திருப்பாசேத்தி, மற்றும் வரும் 11ந்தேதி மானாமதுரை 12 ந்தேதி கட்டிக்குளம் சூட்டுகோல் ராமலிங்க சுவாமி கோவில், கருப்பனேந்தல் மடம் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி கோவில் மற்றும் தொடர்ந்து பல ஊர்களில் பயணித்து ஆகஸ்ட் 24ந்தேதி திருகூடல்மலை திரும்பும் நிகழ்ச்சி நடை பெறுகிறது.

தொடர்ந்து இருபத்தி நான்கு நாட்கள் ஸ்ரீநவ நீதபெருமாள் பக்தர்களை தேடி பல்லாக்கு, பூ பல்லாக்கு, குதிரை வாகனத்தில் நவநீத பெரு மாளை வரவேற்று கிராம மக்கள் திருவிழா போல் பல ஆண்டுகளாக வழிபாடு செய்து வருகிறன் றனர்.

இதில் சுவாமி பல்லாக்கு தூக்கி வருபவர்கள் ஒருமாதம் விரதம் இருந்து சாலை மார்க்கமாக பயணித்து வருகின்றனர்.



அழகுராஜா

தங்கள் ஊர்களுக்கு பெருமாள் தேடிவருவதை கிராம மக்கள் சித்தர்கள் ஆசி நேரடியாக கிடைக்கிறது என கூறிவருகின்றனர்.

ஸ்ரீநவநீதபெருமாள் வருகையின் போது கிராமங்கள் முழுவதும் இரவுபகலாக அன்னதான மும் நடைபெறுகிறது.

– முதன்மை
செய்தியாளர்
அழகுராஜா 9994162182






# நொய்டா கோவில்களில் ஆடிப்பூரம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது

ஆடிப்பூரத்தை முன்னிட்டு, வேதிக் பிரச்சார் சன்ஸ்தானின் இரு கோவில்கள்: ஸ்ரீ விநாயகா ஸ்ரீ கார்த்திகேய கோவில், செக்டர் 62, ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருக்கோயில், செக்டர் 22, ஸ்ரீ துர்கை அம்மனுக்கு வளையல்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

உலக மக்களை காப் பதற்காக அம்பாள் சக்தியாக உருவெடுத்த தினம் ஆடிப்பூரம்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆடிப் பூரம் நடப்பது போலவே பக்தர்களுக்காக வேதிக் பிரச்சார் சன்ஸ்தான் ஏற்பாடு செய்திருந்தனர்.

அனைத்து அலங்காரமும் பூஜை களையும் கோவில் பண்டிதர்கள் ஜெகதீசன் சிவாச்சார்யர், மணிகண் டன் சர்மா, மற்றும் மோஹித் மிஸ்ரா, நடத்தினர். பக்தர்கள் ஏராள மாக வந்திருந்தினர். எத்தனை வெள்ளிக் கிழமைகள் வந்தாலும் ஆடி வெள் ளிக்கு ஒரு தனி சிறப்பு உண்டு. அம்பிகையை வழிபட்டால் இன்பங்கள் இல்லம் தேடி வரும்.


எஸ்.வெங்கடேசன்

ஆடிப்பூரம் மிக சிறப்பாக நடத்தி கொடுத்த திற்காக, கோவில் நிர்வாகம், உறுப்பினர்கள் : வேதமூர்த்தி, சிவராமன், ராதாகிருஷ்ணன், மாலினி, ஜானகி, ரேணுகா, காயத்ரி, லதா, கல் யாணி, ராஜு ஐயர், ராமசேஷன், பாலாஜி, மற்றும் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம மண்டலி, போன்றோரின் சேவையை பாராட்டினார்.

இந்த இனிய நாளினிலே பக்தர்கள், ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் ஸ்லோகம் படித்தனர், த்ரிசதி அர்ச்சனை செய்யப்பட்டது.

மற்றும் தேவி கீர்த்தனைகள் பாடினார்கள். இந்த இனிய நன்நாளினிலே ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாம சத்சங்கம் (விஎஸ்எஸ்), நொய்டா குழுவினர் ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம் ஸ்லோகம் படித் தனர். மகா தீபாராதனையுடன் மகா பிரசாதம் பக்தர்களுக்கு வழங் கப்பட்டது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்




# கனவில் அம்மன் தோன்றினால் என்ன பலன்!

கனவுகள் சில நேரங்களில் வினோதமாக இருக்கும். நாம் வாழும் உலகில் இதுவரை கண்டிராத இடங்கள், தெரியாத முகங்கள் மற்றும் புதுமையான சூழல்கள் ஆகியவை சிலருடைய கனவில் அடிக்கடி தோன்றும் சாத்தியம் உள்ளது. பொதுவாக நாம் காணும் எல்லா விதமான கனவுகளுக்கும் பலன் உண்டு என்று சொல்லிவிட முடியாது. ஆனால், குறிப்பிட்ட சில நேரங்களில், நாம் ஆழ்ந்த உறக்க நிலையில் இருக்கும்போது வரும் கனவுகளுக்கு நிச்சயம் பலன் உண்டு.

இரவு 1 மணி அளவில் நீங்கள் காணும் கனவு ஒரு வருடம் கழித்து பலிக்கும்.

இரவு 2 மணிக்கு கனவு வந்தால் இன்னும் 6 மாதத்தில் பலிக்கும்.

அதிகாலையில் கனவு கண்டால் உடனே பலிக்கும் என்று ஜோதிட சாஸ்திரத்தில் தெளிவாக கூறியுள்ளது.

பொதுவாக, அனைவரது கனவிலும், பொன், பொருள், தீய செயல்கள், மிருகங்கள், பறவைகள் கனவாக வருவதைப் பார்த்திருப்போம், ஆனால் ஒருசிலருக்கு கடவுளே கனவில் தோன்றுவார்கள், அவ்வாறு கனவில் கடவுளாக வரும் போது ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு

பலன் ஜோதிட சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் அம்மன் கனவில் வந்தால் என்ன பலன் என்பதைப் பற்றி பார்ப்போம்.

## கனவில் அம்மன் தோன்றினால் என்ன பலன்!

உங்கள் கனவில் பொதுவாக அம்மன்தோன்றினால் உங்கள் வாழ்க்கையில் சில நன்மை தரக் கூடிய நிகழ்வுகள், செய்திகள் உங்களை நோக்கி விரைவில் வரவிருக்கிறது என்று பொருள், அதிலும் குறிப்பிட்ட அம்மன் வடிவங்கள் வரும்போது அந்த வடிவத்திற்கேற்ப பலன் அமையும். அந்த வடிவம் என்ன என்பதைப் பார்ப்போம்.

www.aanmeegamalar.com

## லட்சுமி தேவி

கனவில் லட்சுமி தேவியைக் கண்டால், வாழ்க்கையில் பொருளாதார நெருக்கடிகள் தீர்ந்து, வாழ்க்கையில் பண மழை பெய்யும். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். லட்சுமி தேவியின் கருணை உங்களை ஆட்கொள்ளவிருக்கிறது என்று பொருள்.

## பார்வதிதேவி

உங்கள் கனவில் பார்வதி தேவியைகண்டால், உங்களுக்கு விரைவில் பதவி உயர்வு கிடைக்கும் அல்லது தொழிலில் பெரிய வெற்றியை பெறலாம் என்பதை புரிந்து கொள்ளுங்கள். வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் லாபம் கிடைக்கும்.

## சிவப்பு நிற ஆடையில் துர்க்கை தேவி

அன்னை துர்கா சிவப்பு நிற ஆடையில் உங்களுக்கு கனவில் தோன்றி, அதே சமயம் முகத்தில் புன்னகையுடன் தோன்றினால், உங்கள் வாழ்வில் ஏதாவது மங்களகரமானது நடக்கும் என்று அர்த்தம். நீங்கள் வழிநடத்தும் எந்தத் துறையிலும் அல்லது நீங்கள் பின்பற்றும் இலக்கிலும் நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்று அர்த்தம். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு விரைவில் குழந்தைப் பேறு கிடைக்கும் என்பதையும் உணர்த்தும்.

## துர்கா தேவியின் சிங்க வாகனத்துடன்

அன்னை துர்கா கனவில் சிங்கத்தின் மீது சவாரி செய்தால், அது மிகவும் மங்களகரமான அடையாளமாக கருதப்படுகிறது. இந்த கனவு உங்கள் வாழ்க்கையில் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் மேலும் துர்கை தேவியின் அருளுக்கு தாங்கள் தகுதியானவர் என்பதையும், உங்கள் பக்தியின் மீது அன்னை மகிழ்வதாகவும் அர்த்தம். துர்க்கையின் ஆசீர்வாதமும், அருளும் உங்கள் மீது மழையாக பொழியும் என்றும் அர்த்தமாகும்.

## துர்கா தேவி கருப்பு உடையில் காட்சி தந்தாள்

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

துர்கா தேவி கருப்பு உடையில் உங்கள் கனவில் வந்தால், வாழ்க்கையில் சில சிரமங்களை சந்திக்க நேரிடும் என்று அர்த்தம். எனவே நீங்கள் இந்த அடையாளத்தை தீவிரமாக எடுத்துக் கொண்டு வாழ்க்கையை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும். நீங்கள் சரியான பாதையில் நடக்க ஆரம்பித்து, உங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ளத் தொடங்க வேண்டும் என்ற எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளவேண்டும், அவ்வாறு தங்களை மாற்றிக் கொள்ளும்போது எளிதாக அம்மனின் அருளுக்கு நீங்கள் பாத்திரமாவீர்கள் என்பதை உணர்த்துவதற்கான அம்மனின் அறிகுறியாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள



**கீதாசமையல்**

(geetha samayal)

youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# ஆடியில் அருள்தரும் புட்லூர் அங்காள பரமேஸ்வரி



அம்மன் கோவில்களில் அம்மனை பல்வேறு வடிவங்களில் காட்சிதருவதைப் பார்த்திருப்போம், ஆனால், புற்று வடிவில், நிறைமாதக் கர்ப்பிணி போல் காட்சி தரும் மாரியம்மனை இதுவரை பார்த்திருக்க வாய்ப்பில்லை.

மேல்மலையனூரில் அங்காளபரமேஸ்வரி முதல், சக்தி பீடத்தில் அமர்ந்து புற்று ரூபத்தில் பல இடங்களில் கோயில் கொண்டருளி அருள் பாலித்து வருகின்றாள்.

அந்தவகையில் சென்னையில் இருந்து 38 கி.மீ. தொலைவில், திருவள்ளூர் அருகேஅமைந் துள்ளது புட்லூர் புற்று மாரியம்மன் ஆலயமான, அங்காள பரமேஸ்வரி கோவில். இங்கே பூங்காவனத்தம்மன் என்ற பெயரில் அருள்பாலிக் கின்றாள்.

பொதுவாக அம்மனை நாம் நின்ற திருக்கோலத்திலோ அல்லது அமர்ந்த திருக் கோலத்திலோ தரிசிப்பது வழக்கம். ஆனால்



இத்தலத்தில் புற்று வடிவில் எழுந்தருளி இருக்கும் பூங்காவனத்தம்மன், ஓர் கர்ப்பிணிப் பெண்போல, மல்லாந்து காலை நீட்டி படுத்த நிலையில், வயிறு நிறைமாதக் கர்ப்பிணிபோல் இருக்க, வாய் பிளந்தபடி அருட்காட்சி தருகிறாள்.

இந்த சுயம்பு புற்று முழுவதும்மஞ்சளாலும் குங்குமத்தாலும் அலங்கரிக்கப்பட்டு காட்சி தருகின்றாள். இந்த மண் புற்று மாதாவுக்கு அப்பால், அங்காள பரமேஸ்வரி சூலம் தாங்கி கருவறையில் எலுமிச்சை மாலைகள் தாங்கி அருள் பாலிக்கின்றாள்.

திருமணம் மற்றும் குழந்தை பாக்கியம் வேண்டுவோர், கோயிலில் நீராடி விட்டு, ஈரத் துணியுடன் அம்மனை வணங்கி, பிரகாரத்தை 11 முறை சுற்றி வந்து வழிபட வேண்டும். இவ்வாறு 9 வாரங்கள் செய்வதன் மூலம், அவர்களுடைய பிரார்த்தனை நிறைவேறும்.

அம்மன் அருளால் கர்ப்பம் தரிக்கும் பெண்கள் தங்களுக்கு சீமந்தம் நடப்பதற்கு முன் அம்மனுக்கு முதலில் சீமந்த வழிபாடு நடத்துகின்றனர். ஐந்து, ஏழு, ஒன்பது மாதங்களில் இந்த சீமந்தவழிபாடு நடத்தப்படுகின்றது. இந்த வழிபாட்டில் வளையல், பூச்சூட்டி சடை முடித்து ஏழுவிதமான கலவை சாதங்கள் செய்து அம்மனுக்கு படையல் இடுகின்றனர்.

பொதுவாக, இக்கோவிலில் செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில், அம்மனைத் தரிசிக்க ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர். அதிலும் அம்மனுக்கு உகந்த ஆடி மாதத்தில், தினமும் பல்லாயிரக்கணக்கான பெண்கள் வந்தவண்ணம் இருக்கின்றனர்.

புட்லூர் அம்மனிடம் வேண்டிக்கொண்டு எலுமிச்சை பழத்தை வைத்து எடுத்து, அதை கோவிலிலேயே அமர்ந்து முழு எலுமிச்சை பழத்தை அப்படியே சாப்பிட்டுவிட்டால் நினைத்த காரியம் வெற்றியடையும் என்ற நம்பிக்கை பக்தர்களிடம் உள்ளது.

தீய சக்திகள், பில்லி சூன்யப் பிரச்சனையில் பாதிக்கப்படுபவர்கள் இந்த அம்மன் ஆலயத்தில் தரும் எலுமிச்சை பழத்தை அங்கேயே அமர்ந்து சாப்பிட்டு பலன் அடைவதாக கூறுகின்றனர்.

புட்லூரில் அங்காள பரமேஸ்வரி அமர்ந்த புற்று வளர்ந்தபடி இருக்கிறது நவக்கிரக தீட்டுகளை நீக்கி. தன்னை நம்பி வரும் பக்தர்களின் திருஷ்டியை விலக்கி, அவர்கள் மீது படிந்துள்ள பில்லி, சூனிய தோஷங்களை அழித்து அருளுகிறாள்.

இன்றும், சிலருக்கு பாம்பாக காட்சி கொடுக்கிறாள், சிலருக்கு மூதாட்டியாக காட்சி கொடுக்கிறாள், ஒரு நிறைமாத கர்ப்பிணிப் பெண் மல்லாந்து படுத்திருப்பது போல அம்மனே இத்தலத்தில் இயற்கையாக தோன்றி உள்ளாள்.

இந்த அதிசய தோற்றத்தை தமிழ்நாட்டில் வேறு எந்த தலத்திலும் காண முடியாது. எனவேதான் புட்லூர் வரும் பக்தர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்வதாக கூறுகின்றனர். புட்லூர் அங்காள பரமேசுவரி கோவிலில் உள்ள சுயம்பு புற்று முழுக்க முழுக்க மஞ்சளும் குங்குமத்தாலும் சூழ்ந்துள்ளது.

கோவில் வளாகத்திலேயே எலுமிச்சை பழத்தில் சுத்தி போடும் நிகழ்வும், தலையில் தண்ணீரை ஊற்றிக் கொண்டு ஈரத்துணியுடன் கோவிலை மூன்று, ஒன்பது, நூற்றிஎட்டு முறை வலம் வரும் பிரார்த்தனைகளையும் பக்தர்கள் செய்து வருகின்றனர்.

குழந்தை பாக்கியம், திருமண பாக்கியம் கைகூடாதவர்கள், மனப்பிரச்சனையில் அவதிப் படுபவர்கள் அவசியம் தரிசிக்க வேண்டிய அற்புதமான ஸ்தலம் புட்லூர் அங்காள பரமேஸ்வரி கோவிலாகும்.

# ஆடிமாதத்தில் கூழ், எலுமிச்சை, வேப்பிலைக்கு ஏன் முக்கியத்துவம் தரப்படுகிறது





நவக்கிரகங்களின் தலைவனான சூரிய பக வான், இவர் கடக ராசியில் சஞ்சரிக்கும் காலமே ஆடிமாதம். இதைக் கற்கடக மாதம் எனவும் அழைப்பர்.

ஆடி, புரட்டாசி, மார்கழி மாதங்கள் இறை வழிபாட்டுக்குரியதாக வழி வந்தவை. மார்கழி பெருமாள் வழிபாடு, புரட்டாசி மாதம் பித்ருக்கள் வழிபாடு மற்றும் நவராத்திரி உற்சவம். ஆடி முழுவதுமாக அம்மனுக்கு. இதனை "சக்தி மாதம்" என்று ஜோதிட நூல்கள் கூறும். சக்தி அதிகம் உள்ள மாதம்.

சூரியன் இக்காலத்தில் பல சூட்சம சக்தி களைத் தரும். வேத பாராயணங்கள், ஜெபங்கள், மந்திரங்கள், மாந்த்ரீகம் போன்றவைகள் இம் மாதத்தில் செய்யப்படும் போது, அதில் அந்த சக்தியின் பிரதிபலிப்பு வெளிப்படும். இம்மாதத்தை சத்திமயமாக வழிபட ஈஸ்வரன் அனுக்கிரஹம் செய்ததாக வர லாறு உண்டு. ஆகவே இதனை அம்மன் மாதம் என்பார்கள்.

இம்மாதத்தில் அதிக பிராண வாயுவின் சக்தி வழக்கத்தை காட்டிலும் கூடுதலாக இருக்குமாம் என்பதைக் கணித்து, வேப் பிலை, எலுமிச்சை பழம், கூழ் போன்றவை இறைவிக்குப் படைத்த பின் நாம் எடுத்துக் கொள்கிறோம்.

உடல் சூடு தணிய, சமசீரான வெப்பநிலை ஏற்படுத்தவும், ஆன்டி ஆக்ஸிடென்ட் சக்தி கிடைக்க, எதிர்ப்பு சக்தி ஏற்பட, பாக்டீரியாக்கள் குறைய மேற்படி மருத்துவ குணங்களடங்கிய பொருட்களை இம்மாதத் தில் பயன் படுத்த நமது முன்னோர்கள் பரிந்துரை செய்து வைத்துள்ளனர்.






மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”

aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்


இந்த மாதத்தில் அதிக பிராண வாயுவின் சக்தி வழக்கத்தை காட்டிலும் கூடுதலாக இருக்கும் என்பதைக் கணித்து, வேப்பிலை, எலுமிச்சை பழம், கூழ் போன்றவை அம்மனுக்கு படைத்த பின் நாம் எடுத்துக் கொள்வதை வழக்கமாக்கி வைத்தனர் நமது முன்னோர்கள்.

பொதுவாக மார்கழி மற்றும் ஆடி மாதத்தை பீட மாதம் என்று போற்ற வேண்டும், ஆனால் ஒரு சிலர் பீடை மாதம் என்று வழக்கு மொழியில் சொல்வார்கள். இது தவறு இந்த மாதங்களை ‘பீட’ மாதம் என்றே அழைக்க வேண்டும்.

"பீட மாதம்" அதாவது நமது இதய பீடத்தில் இறைவன், இறைவியை ஏற்றி வைத்து வழிபட்டுக் கொண்டாட வேண்டிய மாதம் என்பதை குறிக்கவே பீட என்ற சொல்லை பயன்படுத்தினர். ஆனால் கால மொழி மாற்றத்தால் பீட என்பது பீடை என்று மருவியதாக கூறப்பட்டுள்ளது.

ஆடி வெள்ளி, ஆடி செவ்வாய், ஆடி அமாவாசை போன்ற நாட்கள் விரதம் அனுஷ்டித்தால், அம்மனிடம் வேண்டும் வேண்டுதல்கள், கோரிக்கைகளை அம்மன் நிறைவேற்றித் தருவாள் என்பதால், பெண்கள் தங்கள் வாழ்வு சிறக்கவும், மாங்கல்ய பாக்கியம் சிறக்கவும் வேண்டி அம்மனுக்கு விரதம் இருப்பார்கள்.

ஆடி அமாவாசை, ஆடிப்பூரம் நாக பஞ்சமி, ஆடிப் பெருக்கு வரலக்ஷ்மி விரதம் போன்ற பல பண்டிகைகள் ஆடியில் வரிசை கட்டும். அத்தனை தெய்வங்களுக்குமான மாதம் என்பதால் இந்த மாதத்தில் திருமணம் செய்ய மாட்டார்கள்.

இந்த மாதம் தெய்வத்திற்குரிய மாதம் என்பதால், மானிட விஷேசங்களுக்கு முக்கியத்துவம் இந்த மாதத்தில் தருவது கிடையாது. எனவே இந்த மாதத்தில் புதிய தொழில், புது வீட்டிற்கு கிரகபிரவேசம், திருமணம், வாங்கல் விற்றல் போன்ற மானிடர்களுக்கு மகிழ்வு தரும் அனைத்தையும் தள்ளிவைத்து விடுவார்கள்.

மொத்தத்தில் தெய்வ சிந்தனைக்குரியமாதத்தில், மனித இன்ப துன்பங்களை மறந்துசெயல்பட வேண்டும் என்பதால், இந்த மாதத்தில் மனிதர்கள் எந்த செயலுக்கும் முக்கியத்துவம் தருவதில்லை, தெய்வத்தை தங் களது மனப்பீடத்தில் வைத்து வழிபடுவதற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

விவசாயத்தைக் தொடங்கும் காலமிது. மழை பெய்து நீர்ப் பெருக்கு காணும் காலம். நீரை வழிபடும் நாளாகவே ஆடிப் பெருக்கு எனும் ஒரு பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடுகிறோம்.

இந்த காலத்தில்தான் சூரியனின் கதிர்கள் விவசாயத்திற்கு உகந்ததாக கூறுவர். நதிகள் முக்கியம் வாய்ந்தவை என உணர்ந்து, நதிக ளுக்கு மலர்கள், பலவகை புஷ்பங்களிட்டுவழிபடுவர்.

ஆடிப்பட்டம் தேடி விதை எனும் முதுமொழி இதன் சிறப்பைத் தெரிவிக்கிறது. இந்தப் புனித மாதத்தை வரவேற்கும் முகமாகவே உத்தரகாண்ட் மாநிலத்தின் ஹரித்துவாரில் கங்கை நதி நீர் எடுத்து சிவனுக்கு புனித அபிஷேகம் செய்ய திரளாக பல்வேறு இடங்களிலிருந்து பாத யாத்திரையாக வருவர்.

ஆடிப்பூரம் என்பது கேரளா மாநிலத்தின்முக்கிய விழா. இம்மாதத்தை ராமாயண மாதமாக கருதுவர்.

ஹரியும், சிவனும் ஒன்றே என்னும் தத்துவ விளக்கத்திற்காக, நெல்லை சங்கரன் கோவிலில் "ஆடித் தபசு" உற்சவம் 12 நாட்கள் சிறப்பாக நடைபெறும். இம்மாதத்தில்தான் ஹயக்ரீவர் அவதாரம் நிகழ்ந்தது என்பர்.

ஆடி மாதத்தில் நடந்ததாகக் கருதப்படும் கஜேந்திர மோட்சம் என்கிற சிறப்பான நிகழ்வை நினைவுபடுத்த, பற்பல நிகழ்ச்சிகளும் திருமால் எழுந்தருளியுள்ள தலங்களில் நடக்கும். ஸ்ரீ ஆண்டாள் பிறந்தது ஆடிப் பூரத்தன்றுதான். ஆகவே, ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆலயத்தில் ஆண்டாளை நந்தவனத்தில் எழுந்தருளச் செய்துப் பல நிகழ்ச்சிகள் நடக்கும்.


**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப
**சந்தா**

**UPI மற்றும் வங்கி**
**வாயிலாகவும்**
**சந்தா செலுத்துங்கள்...**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM
Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
paytm BHIM BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**